விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 06 ஞாயிற்றுக்கிழமை (22.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 277

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ



# தமிழ்க் கூட்டமைப்பு அமோக வெற்றி

## முதலமைச்சராகிறார் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் எண்ணப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகளவான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளது. தபால் மூல வாக்களிப்பு மற்றும் எண்ணப் பட்ட வாக்குகளின் அடிப்படையில் அறுதிப் பெரும் பான்மையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைக்கவுள்ளது. மாகாண சபை உருவாக்கப்பட்டு 25 வருடங்களின்பின் நடைபெற்ற வடமாகாண சபை தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் ஆணை வழங்கி யுள்ளனர். (24 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல் நியாயமாக நடக்கவில்லை

### கபே அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் நடந்து முடிந்துள்ள மாகாணசபைத் தேர்தல்கள் நீதியாகவும் நியாய மாகவும் நடக்கவில்லை என்று கபே என்ற சுயாதீன தேர்தல் கண் காணிப்பு அமைப்பு தெரிவித்துள் ளது.

குறிப்பாக 5 மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு மாகாணத் தில் பல இடங்களில் இராணுவத் தினரும் இனந்தெரியாத குழுவின ரும் மக்களை அச்சுறுத்தியுள்ள துடன் தேர்தல் பிரசாரங்களிலும் ஈடு பட்டுள்ளதாக கண்காணிப் பாளர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களில் (24ஆம் பக்கம் பார்க்க)

### விசேட பதிப்பு

வடமாகாண சபைத் தேர்தல் முடிவுகளை முழுமையாகத் தாங்கியவாறு உங்கள் வலம்புரி இன்றுபிற்பகல் வெளிவருகிறது. உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

## அமைதியாக நடைபெற்ற வடக்கு மாகாணத் தேர்தல்


### 67 வீதம் வாக்குகள் பதிவாகின

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நேற்று நடைபெற்ற தேர்தலில் ஓரிரு சம்ப வங்களைத் தவிர பெரும்பாலும் அமைதியாகவே தேர்தல் நடைபெற் றுள்ளது.

வட மாகாண சபைக்கான தேர்த லில் வாக்களிப்பு முதலில் மந்தமாக இருந்தபோதும் சுமார் 67 வீதமா னோர் வாக்களித்துள்ளனர்.

காலை 7 மணிக்கு ஆரம்பமான வாக்குப்பதிவு 4.30 மணிக்கு முடி வடைந்தது. (24ஆம் பக்கம் பார்க்க)



## தபால் மூல வாக்களிப்பு

### யாழ்ப்பாணம் மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 7625 | 86.30% |
| ஐ.ம.சு.மு | 1099 | 12.44% |
| ஐ.தே.க | 35 | 0.40% |
| மற்றவை | - | |
| வாக்களிக்கப்பட்டவை | 8949 | 96.22% |
| நிராகரிக்கப்பட்டவை | 114 | 1.27% |
| செல்லுபடியானவை | 8835 | 98.73% |
| பதிவுசெய்யப்பட்டவை | 9301 | |

### கிளிநொச்சி மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 756 | 82.26% |
| ஐ.ம.சு.மு | 160 | 17.41% |
| ஐ.தே.க | 1 | 0.11% |
| மற்றவை | 2 | 0.22% |
| வாக்களிக்கப்பட்டவை | 929 | 95.77% |
| நிராகரிக்கப்பட்டவை | 10 | 1.08% |
| செல்லுபடியானவை | 919 | 98.92% |
| பதிவுசெய்யப்பட்டவை | 970 | |

### முல்லைத்தீவு மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 646 | 81.26% |
| ஐ.ம.சு.மு | 146 | 18.36% |
| ஐ.தே.க | 2 | 0.25% |
| மற்றவை | 1 | 0.13% |
| வாக்களிக்கப்பட்டவை | 800 | 96.27% |
| நிராகரிக்கப்பட்டவை | 5 | 0.63% |
| செல்லுபடியானவை | 795 | 99.38% |
| பதிவுசெய்யப்பட்டவை | 831 | |

### வவுனியா மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 901 | 66.94% |
| ஐ.ம.சு.மு | 323 | 24.00% |
| ஐ.தே.க | 65 | 4.83% |
| மற்றவை | 57 | --- |
| வாக்களிக்கப்பட்டவை | 1371 | 97.79% |
| நிராகரிக்கப்பட்டவை | 25 | 1.82% |
| செல்லுபடியானவை | 1346 | 98.18% |
| பதிவுசெய்யப்பட்டவை | 1402 | |

### மன்னார் மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 1300 | 70.19% |
| ஐ.ம.சு.மு | 408 | 22.03% |
| மு.கா | 135 | 7.29% |
| ஐ.தே.க | 7 | 0.38% |
| வாக்களிக்கப்பட்டவை | 1869 | 97.50% |
| நிராகரிக்கப்பட்டவை | 17 | 0.91% |
| செல்லுபடியானவை | 1852 | 99.09% |
| பதிவுசெய்யப்பட்டவை | 1917 | |

## வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம்
கிளிநொச்சி

நீங்கள் எதிர்பார்ப்பது கௌரவமான நிரந்தர தொழிலா? உங்கள் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய மாதாந்தம் ரூபா 60000.00 உழைத்து எதிர்கால வாழ்வை சிறப்பாக அமைத்துக் கொள்ள அருமையான தொழில்வாய்ப்பு (Excutive) யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு சந்தைப் படுத்தல் துறையில் அக்கறையுள்ள பாடசாலையை விட்டு விலகியவர்களும் நிரந்தர (தொழில்) வருமானத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் 18-30 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

**077 727 4795 / 021 568 6466**

73, St.Annes Church Road, Chundikuly, Jaffna.

**Spoken English at Jaffna.**
**RAM : 072 200 8022** (வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.)

(சி-4778)


# மாவை எம்.பி பிடித்த சந்தேக நபர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை, கொல்லங்கட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள சைவ தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியின் முன் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞனொருவரை பிடித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அந்நபரை அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவது,

தேர்தலில் வாக்களிக்கும் பொருட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெல்லிப்பளை, கொல்லங்கட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள சைவ தமிழ் கலவன் பாடசாலைக்கு சென்றுள்ளார்.

இதன்போது அப்பகுதியில் இளைஞரொருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடி வருவதை மாவை சேனாதிராஜா அவதானித்துள்ளார்.

இதனையடுத்து அவர் குறித்த இளைஞரிடம் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கு அவ்விளைஞர் மறுப்புத் தெரிவித்ததையடுத்து அந்நபரை அவர் அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். (எ-11)


## அரியவாய்ப்பு இன்னும் சில தினங்கள் மாத்திரமே...

மாதம் 250000/- வருமானம், உணவு, இருப்பிடம் இலவசம். ரிக்கெற்றும் இலவசம்.

- ✵ 6 மாதத்திற்கு ஒரு தடவை இலவசமாக ஊர் வந்து போகலாம்.
- ✵ 2 வருட விசா நீடிக்கப்படக் கூடியது.
- ✵ டென்மார்க்கில் படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை (நிபந்தனைகளுக்கமைவாக)

(சி-4754)

7 நாட்களும்
காலை 8.30 - மாலை 6.30 வரை

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090





## VACANCY:- Opportunity for the Management

கனேடிய பல்தேசிய கம்பனியில் முகாமைத்துவத்துறையில் தொழில் புரிய ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ...

- ✵ அனுபவம் தேவையற்றது.
- ✵ அதிகூடிய சித்தி O/L அல்ல A/L மாத்திரமே
- ✵ குறுகிய காலப் பயிற்சி ✵ நிரந்தரத் தொழில் வாய்ப்பு

மட்டுப்படுத்தப்பட்ட 31 வெற்றிடங்கள்

**எம்முடன் இணையும் உங்களுக்கு...**
பயிற்சியின்போது 12000/- பின் 35000/- பெறமுடியும். தங்குமிட வசதி உண்டு. வெளிமாவட்டத்தாரும் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 445 5888, 021 499 3166** (3999)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள் ☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(c-4763)


# பவ்ரலிடம் நூறு முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினருக்கு எதிராக சுமார் நூறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற வட மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் இராணுவம் தேர்தல் வன்முறையில் ஈடுபட்டதாக பவ்ரல் அமைப்பிடம் இம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-4-11)


Sri Lankan Chartered [இலங்கை பட்டயக்கணக்காளர் ] கற்கைநெறி
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
அதி சிறந்த வசதிகளுடன் கூடிய முற்றிலும் மாறுபட்ட முறையில்

CA THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

K-AIMS

புதிய பிரிவுகள் 25th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104, 021 221 9422
COLOMBO 0772 555 814

(சி-4760)



## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் இராசா பிளாசாவுக்குப் பக்கத்தில் பலாலி வீதியிலிருந்து இரண்டாவது காணி [illegible] 2பரப்புக்காணி சுகந்த நிலா கிளினி[illegible] முன்பாக விற்பனைக்குண்டு. (பிரித்து ஒரு பரப்பாகவும் கொடுக்கப்படும்)

(3996)

**தொடர்பு: 077 703 7058**



## FALC FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH

# FRENCH CLASSES

France, Canada, Swiss, Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Certificates இனை பெறலாம்.

ஐரோப்பிய French (DELF) கடந்த Examஇல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி..

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007) இது வரைக்கும் 726 க்கும் மேற்பட்டோர் எம்மிடம் French கற்றுச் சென்றுள்ளனர்.

ஆரம்பம் : 25.09.13 Wed at 9am.
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ Hospital முன்பாக )

ஆரம்பம் : 25.09.13 Wed at 4pm
No. 181, Main Street, Nelliady.
(சோதி வீதி முன்பாக)

Deutsch, IELTS, B1 Sinhala வகுப்புகளும்.

0779 789 456



## மலேஷியாவில் வேலைவாய்ப்பு...

1. சர்வதேச கம்பனிகள் மற்றும் முன்னணி மலேஷியா கம்பனிகளில் வேலை வாய்ப்பு.
2. அடிப்படை வருமானம் ரூ.48000-60000 வரை. தங்குமிடம் இலவசம்.
3. மேலதிக வருமானத்துக்கு பகுதிநேரம் மற்றும் மேலதிக நேர வேலைவாய்ப்புகள் உண்டு.
4. உங்களுக்கு வேலை செய்யுமிடம் பிடிக்கவில்லை என்றால் 2 தடவைகள் இலவசமாக வேலைமாற்றம் செய்து தரப்படும். அதற்கு மேல் எனின் தகுந்த கட்டணம் அறவிடப்படும்.
5. வயதெல்லை 18-55
6. 21 வயதுக்கு குறைந்தவர்கள் கண்டிப்பாக பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
7. மாதம் ஒன்றிற்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மட்டுமே.
8. மலேஷியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கும் வேலைவாய்ப்பு அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
9. வெளிநாட்டு அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
10. கல்வித் தகைமை முக்கியமானதல்ல.

**GLOBAL COLLEGE of HIGHER STUDIES**
788C, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
0212228981, 0777805286

**ASIAN LANKA RECRUITMENT SERVICE (PVT) LTD**
34, பிரங்க்போர்ட் பிளேஸ், கொழும்பு -04

## போலி வார்த்தைகளில் மயங்காதீர்கள்

மலேஷியா உழைப்பதற்கு உகந்த சொர்க்க பூமி ஆகும். நீங்கள் அரச அங்கீகாரம் உடைய நம்பிக்கையான முகவர் நிலையத்தினூடாக சரியான கட்டணம் செலுத்தி வேலைவாய்ப்பு அனுமதி (Work Permit) பெறுவீர்களாயின் உங்களது வேலைக்கும் சம்பளத்திற்கும் உத்தரவாதம் உண்டு. ஒரு வேலைவாய்ப்பு அனுமதி பெறுவதற்கு மட்டும் மலேஷியா அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட தொகை RM.5000 (ஏறத்தாழ ரூ.200,000). மீதி கட்டணமானது விமானச்சீட்டு, இலங்கை வேலை வாய்ப்பு பணியக கட்டணம், இலங்கை மற்றும் மலேஷியாவில் செய்யப்படும் மருத்துவ சோதனைக் கட்டணம் என்பவற்றிற்காக அறவிடப்படும் கட்டணங்களாக்கும். எல்லாவற்றிற்குமாக செலவாகும் ஆகக் குறைந்த தொகை ரூ.2800000. இதனை விட குறைந்த கட்டணத்தில் வேலைவாய்ப்பு அனுமதி பெறலாம் என யாராவது கூறினால் அதை நம்பாதீர்கள். அது சாத்தியமல்லை. அவ்வாறு குறைந்த கட்டணத்தில் பெறப்படும் WORK PERMIT ஆனது உங்களுக்கு தொழில் வழங்கும் முதலாளியால் கட்டணம் செலுத்தி பெறப்படுகிறது. சுருக்கமாக கூறினால் நீங்கள் முதலாளியால் விலைக்கு வாங்கப்படுகிறீர்கள். பின்னர் நீங்கள் மலேஷியாவில் எவரும் செய்ய தயங்கும் இரண்டாம் தர வேலைகளை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள். உங்களுக்கு முகவரால் கூறப்பட்ட வேலைக்கோ அல்லது சம்பளத்திற்கோ எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. வேலையிடத்திலிருந்து தப்பியோடினால் முதலாளியால் காவல்துறைக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நீங்கள் கைது செய்யப்பட்டு ஒப்பந்த கால எல்லை வரை சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும். இல்லையேல் பெரிய தொகை ஒன்றை நட்டஈடாக செலுத்தி நாடு திரும்ப நேரிடும். உங்களது அயலில் மலேஷியா சென்று திரும்பியவர்கள் இருந்தால் விசாரித்து பாருங்கள். எனவே, வெளிநாட்டு வேலை வாய்ப்பு தேடிச் செல்பவர்கள் போலி முகவர்கள் இடைத்தரகர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்காமல் அரச அங்கீகாரம் உடைய முகவர் நிலையங்களூடாக நேரடியான ஆலோசனையை பெற்று வெளிநாடு செல்லுங்கள். மேலும் அவர்களிடம் செலுத்தும் கட்டணங்களுக்கு பற்றுச்சீட்டினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறு வழங்கப்படும் பற்றுச்சீட்டில் நிலையான தொலைபேசி இலக்கம், இலங்கை வேலை வாய்ப்பு பணியகத்தால் வழங்கப்பட்ட அனுமதி இலக்கம், கையொப்பம் என்பவற்றை சரி பாருங்கள்.

## எமது நிறுவனத்தினூடாக இம்மாதம் வேலைவாய்ப்பு அனுமதி பெற்றுள்ளோர்


சிவரூபன் (தொண்டைமானாறு)


சுகிர்தன் (தொண்டைமானாறு)


வைகுந்தராசா (கரணவாய்)


கபில் (முல்லைத்தீவு)


பிரஷாந்த் (கட்டப்பிராய்)


கிரேசியன் (திருநகர்)


அருள்தாசன் (அச்சுவேலி)

மீதி 13 பேர்களின் விபரம் அவர்களின் சொந்த விருப்பத்திற்கேற்ப பிரசுரிக்கப்படவில்லை.

(3990)

# வாக்களிப்பு நிலையம் அருகே துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)

கண்டி கெலபொக்க தேர்தல் வாக்களிப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக நால்வர் காயமடைந்துள்ளனர். இந்த அசாதாரண சூழ்நிலையில் வானை நோக்கி துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராட்சி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாத்ததும்பர பிரதேசத்தில் இரண்டு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் மடோல்கல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் வென்னப்புவ பொரலஸ்ஸ பிரதேசத்தில் இரண்டு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளன. இதன்போது ஒருவர் காயமடைந்த நிலையில் மாரவில ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (2)


தேவை (ஆண்/பெண்)
அலுவலக உதவியாளர்: பியோன்
8ஆம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்..
வயது 20 - 36 வரை மட்டுமே.
யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசத்தவர்கள் மாத்திரம் நேரில் வரவும்.
ஞாயிறு ஓய்வு நாளாகும். தினமும் பி.ப 6.30 மணிக்கு கடமை நிறைவு பெறும். நேர்முகத்தேர்வு 24-09-2013 பி. ப. 5.30 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4753)





Training
வேலை வாய்ப்பு நிறைந்த
Web Designing
Networking
Multimedia
Type Free <Course><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS 324,Palaly road, Jaffna.
Supported by UNDP/JRRP



கட்டட நிர்மாணத்துறையில் நீங்கள் தேர்ச்சி பெற்றவராயின் கொழும்பு/யாழ் / விஸ்வமடு போன்ற இடங்களில் (கட்டடங்கள் / வாய்க்கால் / வாவி) வெற்றிடங்கள். மேசன் / கையுதவியாளர்/ தச்சு / பெயின்டர் / செடலின் பாஸ் தேவை. தொழில் அடிப்படையில் சம்பளம், 25,000/-, 40,000/- என வழங்கப்படும் உணவு, தங்குமிடம் உண்டு.
தொடர்பு :
077-5561883
காரியாலயம் வவுனியா
(C-4758)



நிரந்தர வேலைவாய்ப்பு துறைமுகத்திலும் விமானநிலையத்திலும் (தனியார்) வேலைவாய்ப்பு உண்டு. கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவில் சாதாரண ஊழியர்கள் / வெல்டர் / தச்சு / பெயின்டர் / விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர் கேடரிஸ் பிரிவிலும் வெற்றிடங்கள் 18 - 50 ஆண், பெண் இருபாலாரும் தேவை.
சம்பளம் 18000/-, 35000/-, 45000/- என தொழில் அடிப்படையில் வழங்கப்படும். உணவு, தங்குமிடம் சகாய விலைகளில். வருகை தரும் நாளிலே வேலை.
தொடர்பு : 0775561883
(C-4757)



Solar Panel
உங்கள் மின்சாரத்தைப் பெற சூரிய சக்தியை பயன்படுத்துங்கள்.
10w தொடக்கம் 50w வரையான Solar Panelகளும் அதற்கென வடிவமைக்கப்பட்ட LED 9w மின் குமிழ்கள், charging controleரையும் பெற்றுக்கொள்ள முடியும்.

DATA ACQUISITION DESIGN (PVT) LTD
Industrial Automation & Instrumentation Engineers
மேலதிக தகவலுக்கு : சுகேசன் 077 96 88 330



விரைவான தொழில் வாய்ப்பு. கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் (ஜேம் / சொயட் / கோடியல் / பென்சில் / கோழி இறைச்சி / Water Bottle /ஆடை / பால்மா / கிளவுஸ் / PVC போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி உதவியாளர் / தரம்பிரித்தல் / பொதியிடல் / லேபல் பிரிவுக்கு ஆண் - பெண் 17-50 வயதினர் விரைவாகத் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த கட்டணங்களில் அறவிடப்படும். சம்பளம் 18000/-, 25000/- மற்றும் 32000/-. வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்து கொள்ளப்படுவீர்கள்.
தொடர்பு : 0775561883
காரியாலயம் வவுனியா
(C-4759)



நவீன முறை அச்சுப் பதிப்பகம்
விசிட்டிங்காட் - பில்புத்தகம் - லேபல்கள் - நினைவுமலர்கள்
பருவகால மலர்கள் - சஞ்சிகைகள் - போஸ்டர்கள் - லேட்பாட்
சான்றிதழ்கள் - அழைப்பிதழ்கள் - CD கவர்கள் - CD ஸ்ரிக்கர்கள்
சகலவிதமான பிறிண்டிங் வேலைகளையும் குறைந்த செலவில் நவீன உயர்தொழில் நுட்பத்தில் செய்திட
யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, யாழ். 021 221 7030
(3995)






# இந்தியாவில் மிகப் பெரிய தாக்குதல் நடத்த முக்கிய தீவிரவாத அமைப்புகள் கூட்டு திட்டம்

(புதுடில்லி)

**இந்தியாவில் மிகப் பெரிய தாக்குதல் நடத்தி பேரழிவை ஏற்படுத்தும் வகையில் முன்னணி தீவிரவாத அமைப்பான அல்கொய்தாவும் இந்தியன் முஜாகிதின் தீவிரவாத அமைப்பும் இணைந்து கூட்டுசதி செய்து இருப்பது தெரியவந்துள்ளது.**

அல்கொய்தா தீவிரவாத அமைபபின் தலைவர் அய்மன் அல்-ஷவாஹரி சமீபத்தில் முஸ்லிம் நாடுகளில் வசிக்கும் முஸ்லிம் அல்லாதவர்களை பாதுகாக்கவேண்டும் என்றும் அவர்கள் மீது எந்த தாக்குதலையும் நடத்தக்கூடாது எனவும் அறிவித்திருந்தார்.

**தாக்குதலுக்கு உத்தரவு**

இந்த நிலையில் அல்கொய்தாவும், இந்தியன் முஜாகிதீன் என்ற தீவிரவாத அமைப்பும் இணைந்து இந்தியாவில் பெரிய அளவில் தீவிரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா மீதான தாக்குதல் பற்றி



அல்கொய்தா தீவிரவாத தலைவர் அய்மான் அல்-ஷவாஹரி தனது தீவிரவாத இயக்கத்துக்கு அறிவிக்கும் 'ஜிகாத்' அறிக்கையில் முதல் முறையாக இதனை அறிவித்து உள்ளார்.

அவர் தனது விளக்க அறிக்கையில், 'இந்தியாவில் காஷ்மீரில் தாக்குதல் நடத்த வேண்டும்' என கேட்டுக்கொண்டு உள்ளார்.

இந்தியாவில் தாக்குதல் நடத்துவதற்கு இரு தீவிரவாதிகள் அமைப்பின் திட்டம் ஏறக்குறைய முழுமையாக்கப்பட்டு விட்டதாகவும், ஒரு சில மாற்றங்கள் மட்டும் செய்ய வேணடியிருப்பதாகவும் கூறப்படுகிறது. அந்த திட்டமும் விரைவில் வகுக்கபட்டு இரு அமைப்பும் இணைந்து அதிரடி தாக்குதலில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**விசாரணையில் தகவல்**

சமீபத்தில் டில்லி பொலிஸாரால் இந்திய-நேபாள நாட்டு எல்லையில் கைது செய்யப்பட்ட யாசின் பஹத் கல்லிடம் நடத்திய விசாரணையிலும் குறித்த தாக்குதல் திட்டம் பற்றி தெரியவந்தமை குறிப்பித்தக்கது. (2)


# இந்திய முஜாகிதீன் தீவிரவாதி அப்சல் உஸ்மானி தப்பியோட்டம்

மும்பை சிறப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த அழைத்துவரப்பட்ட இந்திய முஜாகிதீன் தீவிரவாத அமைப்பை சேர்ந்த கைதி அப்சல் உஸ்மானி பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பித்துள்ளான்

குஜராத் மாநிலம் ஆமதாபாத் நகரில் 2008ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி தொடர் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. 21 இடங்களில் நடந்த இந்த குண்டுவெடிப்புகளில் 56 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டனர். 200இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இந்திய முஜாகிதீன் தீவிரவாத அமைப்பை சேர்ந்த இவர் ஒரு மாதத்துக்குப் பின் பொலிஸில் சிக்கினான். இதனையடுத்து மும்பை பொலிஸார் அவன் மீது பல வழக்குகள் பதிவு செய்தனர் இவன் நவி மும்பையில் உள்ள தலோஜா மத்திய சிறையில் அடைக்கப்பட்டு இருந்தான்.

இந்த நிலையில் வழக்கு ஒன்றில் அப்சல் உஸ்மானி உட்பட 19 பேரை தலோஜா சிறையில் இருந்து மும்பை செசன்சு நீதிமன்ற வளாகத்திலுள்ள "மோக்கா" சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்து வதற்கென நேற்றுமுன்தினம் மதியம் பொலிஸாரால் அவர்கள் அழைத்து வரப



பட்டிருந்தனர். நீதிமன்றில் குற்றவாளிகள் மீது குற்றச்சாட்டு பதிவு செய்வதற்காக அவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

**தப்பியோட்டம்**

இந்த நிலையில் அப்சல் உஸ்மானி கழிவறை சென்று வருவதாக பொலிஸாரிடம் கூறி சென்றான். ஆனால் திரும்பி வரவில்லை. அவர் அங்கிருந்து மாயமாகி விட்டமை, பாதுகாப்பு பொலிஸாருக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது. அப்சல் உஸ்மானியை அந்த பகுதி முழுவதும் தேடினர். ஆனால் அவன்பொலிஸாரின் கண்ணில் மண்ணைத் தூவி தப்பி சென்றமை பின்பு தெரியவந்தது.

குற்றவாளி அப்சல் உஸ்மானி தப்பியோடிய தகவலை அரசு சட்டத்தரணி நீதிபதியிடம் தெரிவித்தார். அவனுக்கு கைது வாரண்டு பிறப்பிக்குமாறும சட்டத்தரணி முறையிட்டார்.

பாதுகாப்பு பொலிஸாரே அவனை நழுவ விட்டு இருக்கலாம் என்ற புகாரும் எழுந்து உள்ளது. இது பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருவதோடு, தப்பியோடிய அவனை பிடிப்பதற்கு தேடுதல் வேட்டை யில் ஈடுபட்டுமுள்ளனர். (2)

# இந்திய மீனவர்கள் 58 பேர் பாகிஸ்தானில் கைது

(கராச்சி)

பாகிஸ்தான் கடற் பகுதியில் அத்துமீறி நுழைந்த, 58 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவை சேர்ந்த 58 மீனவர்கள், ஒன்பது படகுகளில் அரபிக் கடலில் கராச்சி அருகே, மீன் பிடித்து கொண்டிருந்தனர்.

அப்பகுதியிலிருந்து வெளியேறும்படி, பாகிஸ்தான் கடலோர காவற்படையினர் எச்சரித்தும் இவர்கள் தொடர்ந்து மீன்பிடித்ததால், 58 மீனவர்களும் உடனடியாககைது செய்யப்பட்டதாக கடலோர காவற் படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களின் ஒன்பது படகுகளும், பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கராச்சி சிறையில் ஏற்கனவே 97 இந்திய மீனவர்கள் உட்பட 100 பேர் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# டெங்கு காய்ச்சலுக்கு 912 பேர் பாதிப்பு


(புதுடில்லி)

டில்லியில் டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவி வருகிறது.

இந்நிலையில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 912 ஆக உயர்ந்துள்ளது.

டில்லியில் பருவமழை முடிவடைந்த நிலையில் டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவ ஆரம்பித்துள்ளது. கடந்த ஜூலை மாதம் முடிவில 11 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டிருந்தனர்.

ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 131 பேர் பாதிக்கப்பட்டு, பாதிப்பு எண்ணிக்கை 142 ஆக உயர்ந்தது. தற்போது செப்டெம்பர் மாதத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் மேலும் அதிகரித்தது. கடந்த 14ஆம் திகதி




வரை செப்டெம்பரில் மட்டும் 304 பேர் இக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்.

இந் நிலையில், கடந்த 5 நாட்களில் இக் காய்ச்சல் மேலும் வேகமாக பரவியுள்ளது. இதனால் 466 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து டெங்கு பாதிப்பு எண்ணிக்கை 912 ஆக உயர்ந்துள்ளது. டெங்கு பாதிப்பால் இதுவரை 5 பேர் இறந்து முள்ளனர். (2)

## பாரதச் செய்தி




புதுடில்லியில் தேசிய ஒருமைப்பாடு விருதுகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி பிரணாப் தொண்டு நிறுவன பிரதிநிதியான வீரேந்திர ட்ரேஹனுக்கு விருது வழங்கியதையும் அருகில் பிரதமர் மன்மோகன் சிங் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# தெலுங்கானா தனிமாநில முடிவில் மாற்றமில்லை

## மத்திய அரசு திட்டவட்டம்

(புதுடில்லி)

தெலுங்கானா தனிமாநிலம் அமைக்கும் முடிவில் மாற்றமில்லை. இந்த விடயத்தில் மாற்று கருத்துக்கே இடமில்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஆந்திர மாநிலத்தைப் பிரித்து தெலுங்கானாவை தனி மாநிலமாக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக விடுக்கப்பட்டு வந்தது. அந்த மாநிலத்தைச் சேர்ந்த தெலுங்கானா ராஷ்டிரீய சமிதி கட்சி, இக் கோரிக்கையில் தீவிரமாக செயற்பட்டு பல போராட்டங்களை நடத்தியது.

இந்நிலையில், கடந்த ஜூலை 30ஆம் திகதி நடந்த காங்கிரஸ் காரிய குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்தது. தனி மாநிலம் உருவாக்குவதற்கான பணிகளைக் கவனிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இதற்கிடையில் ஆந்திர மாநிலத்தை பிரிக்கக் கூடாது என அந்த மாநிலத்தில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பான குறிப்பு, இன்னும் 20 நாட்களுக்குள் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் சுஷீல்குமார் ஷிண்டே தெரிவித்திருந்தார்.

இச் சூழ்நிலையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்திம் நடைபெற்றது. ஆனால், தெலுங்கானா மாநிலம் உருவாக்குவது தொடர்பான குறிப்பு, அமைச்சரவைக் கூட்டத்தில் பார்வைக்கு வைக்கப்படவில்லை. இது குறித்து மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் மணீஷ் திவாரியிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

தெலுங்கானா மாநிலத்தை உருவாக்கும் விடயத்தில் அரசிடம் மாற்றுக் கருத்துகள் எவையும் உள்ளனவா என அமைச்சரிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் கூறியது.

இது உணர்ச்சிபூர்வமான விடயம். இந்த விடயத்தில் கமிட்டியின் அறிக்கையை பரிசீலித்து சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அவை வெளிப்படையானவை. தனிமாநிலம் உருவாக்குவதற்கான பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை.

உள்துறை அமைச்சர், சட்ட அமைசசகம் ஆகியோரின் பரிசீலனைக்குப் பின் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரின் பார்வைக்கு அது அனுப்பிவைக்கப்படும். அவர்கள் ஒப்புதல் அளித்த பின் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்படும்.

அமைச்சரவை ஒப்புதலுக்குப் பன், அது தொடர்பான தீர்மானம் ஆந்திர மாநில சட்டப்பேரவைக்கு அனுபபிவைக்கப்படும். இதை யடுத்து நாட்டின் 29 ஆவது மாநிலமாக தெலுங்கானா உருவாகும என்றார். (2)

# நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ மகாராணியுடன் கலந்துரையாடல்

நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ பிரித்தானிய மகராணி இரண்டாவது எலிசபெத்தை சந்தித்து இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

மாகாராணியார் கடந்த 40 வருடங்களுக்கு பின்னர் கலந்து கொள்ளாத முதலாவது பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ள இம்மாநாடாகும்.

இதில் அவருக்கு பதிலாக அவரது புதல்வர் இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

அதேவேளை இலங்கை அரசாங்கம் மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக மாநாட்டைப் புறக்கணிக்க போவதாக கனேடிய பிரதமர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இது தொடர்பான நியூசிலாந்து தொலைக்காட்சி செய்தியாளரின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ஜோன் கீ, கனடாவின் பார்வையில் அவர்கள் எடுத்துள்ள முடிபுக்கு தாம் மதிப்பளிப்பதாக நியூசிலாந்து பிரதமர் கூறியுள்ளார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாது போனால் என்ன கிடைக்க போகிறது என்பதை நியூசிலாந்தின் பார்வையில் இருந்து நான் யூகிக்கின்றேன்.

நியூசிலாந்தின் பால்மா ஏற்றுமதி தொடர்பாக ஏற்பட்ட எதிர்ப்பை சரி செய்யும் வகையில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதற்காக நியூசிலாந்து மாநாட்டில் கலந்து கொள்ள தீர்மானித்துள்ளதா? என தொலைக்காட்சி செய்தியாளர் பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பிரதமர் கீ இலங்கை என்பது நியூசிலாந்துக்கு மிகப் பெரிய சந்தையாகும்.

இலங்கையில் அரை பில்லியன் டொலர் பெறுமதியான பொன்டேரா உற்பத்திகள் விற்பனை செய்யப்படுகின்றன என்றார். (2)

# நிறுத்தல் அளவைகள் முத்திரையிடப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உபஅலுவலக பிரிவுக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் பாவனைக்குட்படுத்தும் நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கான முத்திரையிடும் நடவடிக்கை நாளை திங்கட்கிழமை பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

CIMA

அதி சிறந்த வசதிகளுடன் கூடிய
முற்றிலும் மாறுபட்ட முறையில்,
தொழில் சார் கற்கைநெறியில் அனுபவம் உள்ள
விரிவுரையாளர்களுடன் CIMA-UK கற்கைநெறி
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

(சி/4760)

K-AIMS

புதிய பிரிவுகள் 25th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104, 021 221 9422
COLOMBO 0772 555 814

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்:புனர்பூசம் 4ம்,
கி.பா:23.25 செவ்: 8ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L ஆய்வு கூட உதவியாளர் (அரச)
தொ.இ:B2328

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 3ம்,
உயரம்: 5'7"
கி.பா:9.5
தகைமை/ தொழில்: National Certificate in Engineering Auto CAD
தொ.இ:B2329

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: ரேவதி
கி.பா:8.5
உயரம்: 170CM
தகைமை/தொழில்:BA (அபிவிருத்தி உதவியாளர்)
தொ.இ:B2330

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: சித்திரை 4 ம்
கி.பா :26.5 செவ். 8
தகைமை/தொழில்:N.D.T Mechanical Engineering (உதவி முகாமையாளர் தனியார் கம்பனி)
தொ.இ:B2331

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: உத்தராடம் 3ம்
கி.பா :51.5 சூரி.செவ் 7ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L கணனி இயக்குநர் (அரச)
தொ.இ:G2321

பிறப்பு: 1989 இந்து (V)
நட்சத்திரம்:சுவாதி 4ம்
கி.பா :28
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L Cima முகாமைத்துவ கற்கை நெறி
தொ.இ:G2322

பிறப்பு: 1989 இந்து (V)
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4ம்
கி.பா :38 2 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:Cima Bank (தனியார்)
தொ.இ:G2326

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்: விசாகம் 3
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்
தொ.இ:G1903

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- Nail art
- மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 29-09-2013
ஞாயிறு காலை 9.00 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 02-10-2013
புதன் காலை 9.00 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-
Guru

நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவிற்கு. PAVING STONES.

உங்கள் இல்லங்கள் நிறுவனங்களை அழகுபடுத்துவதற்கு தேவையான பல்வேறுவடிவமைப்புக்களை கொண்ட நிலப்பதிப்புக்கற்களை யாழ், வவுனியா, முள்ளியவளை, திருமலை, கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள எமது காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.



(C-4776)

பிரணவன் என்ரபிறைசஸ். பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.(சங்கிலியன் சிலைக்கு முன்பாக) தொடர்பு : 0773818799.

# ஆளும் கட்சிக்கு வாக்களிக்குமாறு சீருடையினர் பலவந்தம்!!

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் சிவில் உடையில் வந்த சீருடையினர் ஆளுந்தரப்புக்கு வாக்களிக்குமாறு பொது மக்களிடம் பலவந்தமாக கேட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் தேர்தல் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே இவ்வாறு குறித்த பகுதி மக்களிடம் அவர்கள் கேட்டுள்ளனர்.

இதையடுத்து குறித்த பகுதிக்கு வருகை தந்த காரைநகர் பிரதேச சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களால் இந் நடவடிக்கை தடுக்கப்பட்டுள்ளதாகவும் இவ் விடயம் தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு பிரதேச உறுப்பினர்களால் தெளிவுபடுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவற்றின் பின்னரும் மேற்படி பிரசார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-5-246)






நன்றி:-ஐலண்ட்

# பருத்தித்துறை வீதியில் கார் விபத்து; கணவன்,மனைவி,சிசு காயம்



(கரணவாய்)

வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த குடும்பத்தினர் பயணித்த கார் விபத்துக்குள்ளானதில் கணவன் மனைவி மற்றும் அவர்களது சிசு ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரசவத்தை முடித்துக் கொண்டு நேற்றைய திணம் வீடு நோக்கி இவர்கள் சென்று கொண்டிருந்த வேளையில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள நாவலர் மடத்தடிக்கு அருகாமையில் உள்ள தோட்டவெளிப் பகுதியில் இவர்கள் பயணித்த கார் விபத்துக்குள்ளானது.

சம்பவதினம் பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்ற இவ்விபத்தில் சிசுவும் தந்தையும் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சிசுவின் தாயும் காயங்களுக்குள்ளாகியுள்ளார். இக் குடும்பம் பயணித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தொலைபேசி இணைப்பு கம்பத்துடன் மோதியதில் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதோடு வாகனம் மோதிய மின்கம்பமும் நொருங்கியுள்ளது.

இவ்வாறு தொலைபேசி இணைப்பு மின்கம்பத்துடன் மிகுந்த வேகத்துடன் மோதிய இக்கார் விபத்தின்பின் யாழ்ப்பாணம் நோக்கிய திசையில் திரும்பி நின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து இடம்பெற்றபோது காரினுள் கார் சாரதி உட்பட நால்வர் இருந்துள்ளனர்.

நெல்லியடிப் பொலிஸார் இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை தற்போது மேற்கொண்டுள்ளனர். (செ-5-60)

# வீதியில் வீழ்ந்துள்ள மரத்தை அகற்றுக

(சாவகச்சேரி)

மண்டுவில் சோலை அம்மன் கோவிலையும் முருகன் கோவிலையும் ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியில் பாரிய மரமொன்று வீழ்ந்துள்ளதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இம்மரம் முறிந்து மூன்று நாட்கள் கடந்துள்ள நிலையில் இது வரை அவ்விடத்தினை விட்டு அகற்றப்படவில்லை.

இவ் வீதி டச்சு வீதியையும் மருதடி வீதியையும் இணைக்கும் பிரதான வீதி என்பதால் அதிகளவான மக்கள் அன்றாடம் போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ள பாரிய மரத்தினை அகற்ற சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(அ-9-29)

# த.தொ.பாடத்துக்கு விண்ணப்பம் கோரல்


(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனான தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் மேற்படி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நடைபெற்று முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி பரீட்சை முடிவுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கென விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம், இல 53, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் நிறுவகத்தின் யாழ். நிலைய இணைப்பாளர் ம.றமணன் அறிவித்துள்ளார். (அ-5)



அலியான்ஸ் இன்சூரன்ஸின் யாழ். மெற்றோ கிளையின் பிராந்திய முகாமையாளரும் லயன்ஸ் கழக உறுப்பினருமான லயன் கு.சிறிராமின் நிதி உதவியுடன் காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழக தலைவர் லயன் ஆ. அருள்ஜோதி தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் அலியான்ஸ் இன்சூரன்ஸின் யாழ்.மெற்றோ கிளையின் பிராந்திய முகாமையாளர் லயன் கு.சிறிராம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (படம்:-புன்னாலைக் கட்டுவன் செய்தியாளர்)

## யாழில் பல இடங்களில்

# வாக்களிக்க சென்ற மக்கள் மீது தேர்தல் பிரசாரங்கள் திணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் நேற்றைய தினமும் நேற்று முன்தினம் கட்சி ஆதரவாளர்களுடன் வேட்பாளர்களும் களத்தில் இறங்கி பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலில் வாக்களிக்கச் செல்லுபவர்களின் கைகளிலும் துண்டுப்பிரசுரங்கள் திணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரப்பகுதி, இளவாலை, நகுலேஸ்வரம், கந்தர்மடம், சாவகச்சேரி உள்ளிட்ட பிரதேசங்களில் இடம்பெற்றுள்ள வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகள் வாக்குச் சாவடிகளை அண்மித்த பகுதிகளில் இடம்பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு வழங்கப்பட்டவற்றில் பெரும்பாலும் ஆளும் கட்சியினரின் துண்டுப் பிரசுரங்களே மக்களின் கைகளை சென்றடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (செ-5)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு மெய்ஞான வைரவர் கோவில் அலங்கார உற்சவத்திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 108 சங்காபிஷேக பூசையும் நடைபெறவுள்ளது. (செ-5)

# இராணுவம் மற்றும் ஆளும் கட்சியினரால் கிளிநொச்சி மக்கள் அச்சமடைந்துள்ளனர்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முறைப்பாடு

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவம் மற்றும் ஆளுங்கட்சி செயற்பாடுகளால் மக்கள் அச்சமடைந்துள்ளரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களிடமும் தேர்தல் திணைக்களத்திடமும் முறைப்பாடு செய்துள்ளது.

இம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 19ஆம் திகதி இரவு இராணுவத்தினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் இணைந்து கிளிநொச்சி மாவட்ட த்தின் பல பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இவர்களின் ரோந்து நடவடிக்கையானது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயற்பாடுகளுக்கு பாதுகாப்பு அளிப்பதாகவே அமைந்திருந்தது.

ஆளும் கட்சி உறுப்பினர் தலைமையில் தட்டுவன்கொட்டி, பளைப்பிரதேசம், கண்டாவளை, அம்பாள்குளம், ஆலங்கேணி, நல்லூர், சாமிப்புலம், முட்கொம்பன், தர்மபுரம் பகுதிகளில் தீவிர பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பிரசார நடவடிக்கைக்கு தொண்டராசிரியர்களும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டனர்.

இராணுவத்தினர் சீருடையிலும் சிவில் உடையிலும் நேரடியாக நேற்றிரவு (நேற்று முன்தினம் இரவு) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கான பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர். இன்றைய தினமும் (நேற்றைய தினமும்) பகல் வேளைகளில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் வீடு வீடாகச் சென்று வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கட்டாய இராணுவக் கட்டளையைப் பிறப்பித்து வந்துள்ளனர்.

சி.எஸ்.டி என்று சொல்லப்படுகின்ற சிவில் பாதுகாப்புப் பிரிவு என்ற போர்வைக்குள் உள்வாங்கப்பட்ட தொழிலாளர்களின் வாக்காளர் அட்டைகளை கட்டாயப்படுத்தி போட்டோப் பிரதி செய்திருக்கிறார்கள். அ த்தோடு கோணாவில், ஊற்றுப்புலம், யூனியன் குளம், பூநகரி கிராமங்களான நெற்புலவு, கிராஞ்சி, வேரவில் பகுதிகளிலும் வாக்காளர் அட்டைகளை போட்டோ பிரதி செய்து தருமாறு மக்களை இராணுவத்தினர் அச்சுறுத்தி வந்திருந்தனர்.

நேற்றைய தினமும்,(நேற்றைய தினமும்) இன்றைய தினமும் (நேற்றைய தினம்) நடக்கும் இராணுவ நடவடிக்கைகள், வீதிச் சோதனைகள் அரச கட்சி சார்பாகவே மேற்கொள்ளப்படுகின்றன என்பதுடன் அவை ஒரு நேர்மையான தேர்தல் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற வாய்ப்பில்லை என்பதையும் காட்டுகின்றன.

எனவே கிளிநொச்சியில் ஜனநாயகமானதும் சுதந்திரமானதும் நியாயமானதும் நேர்மையானதுமான தேர்தல் ஒன்று நடைபெற வேண்டுமாயின் இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்கி சிவில் உடையில் உலவும் இராணுவத்தினரை மீளப் பெற்று தேர்தலைப் புனிதப்படுத்துமாறு தங்களை அவசரமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இராணுவம் மற்றும் ஆளும் கட்சி செயற்பாடுகளால் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் தங்களுக்கு அறியத் தருகிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

# 25 மாவட்டங்களுக்கும் பொறுப்பாக மாவட்ட அமைச்சுகள் நியமிக்க தீர்மானம்?

மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு புதிய முதலமைச்சர்கள் பதவியேற்ற பின்னர் இலங்கையிலுள்ள சகல மாவட்டங்களுக்கும் மாவட்ட அமைச்சர்கள் நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களுக்கும் பொறுப்பாக இந்த அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

மாகாண அமைச்சர்களின் நியமனத்துடன் நியமிக்கப்படவுள்ள இந்த மாவட்ட அமைச்சர் பதவிகளுக்கு கடந்த பொதுத் தேர்தலில் அதிகளவான விருப்பு வாக்குகளை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளதாக அறிய கிடைத்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தில் ஏற்கனவே சிரேஷ்ட மற்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள 66 அமைச்சர்கள், இரண்டு திட்ட அமைச்சர்கள், 29 பிரதியமைச்சர்கள் பதவி வகித்து வருகின்றனர்.

எவ்வாறாயினும் மாகாண சபைகளின் நிர்வாக நடவடிக்கைகளில் தலையிடும் நோக்கில் அரசாங்கம் இந்த புதிய அமைச்சு பதவிகளை ஏற்படுத்த தீர்மானித்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு கைப்பற்றும் நிலையில் குறித்த மாவட்ட அமைச்சர்கள் நியமனம் கூட்டமைப்பின் நிர்வாகத்தில் அழுத்தங்களை ஏற்படுத்தலாம் என கூறப்படுகிறது. (அ-2)

# இராசி பலன்

22.09.2013
(புரட்டாதி 06, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
திருதியை பிற்பகல் 4.16 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 8.27 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை

**மேடம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு படுத்திக் கொள்வீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றம் செய்வீர்கள், வேலைச் சுமை கூடும்.

**இடபம்** சிந்தித்துசெயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், பிதா சிந்தையுண்டு, பிரியமான சிலருக்காக சில செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், உறவினர்களுடன் கலந்துரையாடல்கள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியமான ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், தலைமைப் பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆன்றோர்கள் சந்திப்புண்டு,புதிய திட்டங்கள் கை கூடும்,சிலருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டி வரலாம், மறைமுகப் போட்டிகள் குறையும்.

**கன்னி** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம், மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் உதவியை நாடுவீர்கள், அபூர்வ சந்திப்புண்டு.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவர், சுவாரஸ்யமான நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புத்தி சாதுரியமாக நடந்து பொருள் வரவை பெருக்கிக் கொள்வீர்கள், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகளை கூறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**கும்பம்** வேலையில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், மூத்த சகோதரர் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர்.

**மீனம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், திருமணப் பேச்சுக்கள் முடிவாகலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## எதுவலிமை

புத்தர் ஒருமுறை தெரு வழியே நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு எதிராக நடந்து வந்த ஒருவன் புத்தரை நோக்கி "உன்னை என்னால் கொல்ல முடியும்!" என்று கூறினார்.

அதற்கு புத்தர் அவனை நோக்கி "என்னைக் கொல்வதற்கு முன்பாக என்னுடைய இறுதி ஆசை ஒன்றை நிறைவேற்ற முடியுமா?" என வினவினார்.

அதற்கு அவன் "என்னால் எதுவும் முடியும்... என்ன வேண்டும்... சொல் செய்கிறேன்!" என்று வீராப்போடு கூறினான்.

அப்போது புத்தர் "வேறொன்றுமில்லை... அதோ ஒரு மரம் நிற்கிறதே அந்த மரத்தின் கிளையை வெட்டிவிடு!" என்றார்.

"அவ்வளவு தானா... இதோபார்... அதை வெட்டி வீழ்த்துகிறேன்...!" என கூறிக் கொண்டு வாளை உருவிய அவனின் ஒரே வீச்சில் கிளை கீழே விழுந்தது.

அப்போது அவன் "இதோ வீழ்த்தி விட்டேன்... இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமா?" என்று கேட்டான்.

அதற்கு புத்தர் "ஆமாம் ஒன்று மீதம் இருக்கிறது!" என்றதும் "அதையும் சொல் முடித்து விடுகிறேன்!" என்று பெருமிதத்தோடு கூறினான்.

புத்தர் அவனை நோக்கி "மறுபடியும் பழையபடி அந்தக் கிளையை மரத்துடன் பொருத்திவிடு...! அதுபோதும்!" என்றார்.

அதற்கு அவன் "அது யாராலும் முடியாத காரியம்... உனக்கென்ன பைத்தியமா!" என்று சிரித்தான்.

அவன் இவ்வாறு கூறியதும் புத்தர் அவனிடம் உன் வலிமையால் மற்றவரைத் துன்புறுத்தி அழிக்க எண்ணுகிறாயே... அப்படியாயின் நீயல்லவா பைத்தியக்காரன்... இதை ஒரு குழந்தையும் செய்யுமே... என்றார்.

புத்தர் சொன்னவற்றை கேட்டு குழப்பமடைந்த அவன் "அப்போது எது வலிமை" என்று கேட்டான்.

அதற்கு புத்தர் "உண்மையான வலிமை உடையவர்கள் ஒன்றை ஆக்கவும், குணப்படுத்தவும் அறிவார்கள்!" என்றார்.

அப்போதுதான் அவன் உண்மையை அறிந்து கொண்டான்... அரிய செயல் என்பது துண்டுபண்ணுவதல்ல... உண்டு பண்ணுவதே!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 80 |
| தக்காளி | 120 | 80 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 60 | 80 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-120 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 80 | 60 |
| லீக்ஸ் | 100 | 80 | 80 |
| பீற்றூட் | 10 | 10 | 40 |
| கறிமிளகாய் | 60 | 40 | 60 |
| முருங்கைக்காய் | 140 | 160 | 160 |
| போஞ்சி | 120 | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | 60 | 60 | 120 |


# பெண் நிலை

பெண்ணே உன்
கட்டழகை கண்டதும்
காதல் என்பான்
காளையவன்
காதிலே வாங்காது
போனால்
பின் தொடர்வான்
பித்துப் பிடித்தவனாய்
வாழ்ந்தால் உன்னுடன்
இல்லையேல்
சாவில் என்பான்
பேதை அதை நம்பி
சம்மதம் என்றவுடன்
பீச்சென்றும்
பாக்கென்றும்
சுத்தியிருந்துவிட்டு
சென்று வருகிறேன்
என்றிடுவான்
நம்பி அவள்
நாளை கழித்திடுவாள்
அவனோ பணத்தில்
புரள்வதற்காய்
பறந்திடுவான் தூரதேசம்
அவன் வரவுக்காய்
காத்திருந்து
இன்ப வாழ்வை
இளமையை
தொலைத்து
கன்னியாய்
இருந்திடுவாள்
காலமெல்லாம்

*சி.கலாமணி, மண்டைதீவு*







# காதலனுக்கு ஒரு தூது

ஒருமுறை பார்த்த- உன்
விழி அசைவுகளால்
நான் துண்டுதுண்டாய்
தூளாகிப்போனேனே!
உன் கண்ணசைவில் தடுமாறி
விண்வெளியில் அலைந்திடும்
கற்களாய் பறக்கிறேன்
வந்துவிடு...
திசைமாறிய எனக்கு
திசைகாட்டியாய்....!

*தாட்ஷாயினி, சுதுமலை*

# இன்றைய காதல்

தூதுக்காதல் தொலைத்து
கடிதக்காதல் கலைத்து
கணனிக் காதல் முளைத்து
இன்ரநெற் ஈமெயிலில்
நாளுக்கொரு காதலரை
நாசுக்காக... நாகரிகமாக...
மாற்றிக்கொள்ளும்
மனித சாயலில் விலங்குகள்!
கணனி வகுப்பு
கடற்கரையில் பியர் அடிப்பு
கையில் பேசியுடன்
கறுப்பு பல்சர் பைக்கு
இன்றைய காதலின்
கற்பனை வடிவம்!
சங்ககாலக் காதலோ
காவியமானது
இந்தக் காலக் காதலோ
நீதிமன்ற வாசல் மயமாகிறது
கையில் பிள்ளையுடன்
படிப்பணத்தை
எதிர்பார்த்தபடி

விவேகானந்தனூர் சதீஸ்,
கிளிநொச்சி

# ஓர் ஆன்மாவின் உள்ளத்திலிருந்து....

அன்பு புறக்கணிக்கப்பட்ட
ஆயுள் கைதி நான்
இளைத்து உடல் தேய்ந்து
ஈன்றவன் அன்புக்கு ஏங்கும் குழந்தை நான்
உள்ளம் நரை கண்டு
ஊன்றுகோல் ஊன்றிடும் மனசும் நான்
என் எண்ணங்கள் மலை ஏற
ஏணியில் ஆடிடும் உடம்பு
ஐயம் இல்லாத நட்பில் ஆறுதல்
காணும் என் ஆன்மா
ஒரு நூறு ஆசைகளுக்கு
ஓய்வில்லாமல் உழைத்தது புலன்கள்
ஔவியம் என்னை தீயால் எரித்தும்
நான் மறுபடியும் சாம்பலில் பூத்தேன்


எம்.நேதா, நெடுந்தீவு.

# தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
திருப்பள்ளி எழுச்சிதன்னை
தினம்படிக்கும் அன்தைனை
அன்னியப்படுத்திவிட்டு
குத்துப்பாட்டில் தினம்
கண்விழிக்க வைக்கின்றான்
மூழ்கிக் கிடக்கின்றான்
பிறர் மூச்சடைப்பதறியாமல்

மாவை.நா.கஜேந்திரன்




# மௌனத்தின் தேடல் - 170

## நடைமுறை

அன்று முயற்சியுடையவன் மட்டும்
ஜெயித்தான் வாழ்க்கையில்- ஆனால்
இன்று முயற்சியுடையவனை கீழே தள்ளி
குறுக்குவழி தெரிந்தவன் மட்டுமே
ஜெயித்துக்கொண்டிருக்கிறான்
வாழ்க்கையில்

றூபி விமலதாஸ்
நவாலி

## புத்தியே சக்தி

உலகில் எல்லா
ஜீவராசிகளையும்
வாழவைக்கும் சக்தி
அதுதான் இந்தப் புத்தி

க.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மந்திரக்கோல்

சொல்லைப்போல் கல்லைப்போட்டு
காலத்தைக் கடத்தாமல் கலங்காமல் காக்க
எட்டத்திலிருப்பதை கிட்டவரச் செய்யும்
நவநாகரிகமான மந்திரக்கோலை
தந்திரக் காக்கையார் கைப்பற்றிவிட்டார்

அரு.கனகராசா
சாவகச்சேரி

## அறிவு

கல்லைப்போட்டு தண்ணீர் பருகிய நான்
இன்று குழாய்மூலம் தண்ணீர் பருகி
என் அறிவைப் பெருக்கியதைப் போன்று
மனிதர்களாகிய நீங்களும்
நன்மையான காரியங்களில்
உங்கள் அறிவைப் பெருக்குங்கள்

திருமதி மேரி அல்போன்சா
குருநகர்

## நாளை

அன்றைய காகம் முட்டிக்குள்
இருந்த நீரை கல்லுப்போட்டு
உயர்த்திக் குடித்தது!
இன்றைய காகம்
ஸ்ரோ போட்டு
முட்டிநீரை குடித்தது!!
நாளை!?

சி.ஜெயருக்ஷன்
சாவகச்சேரி

## காக்கையாரே

நேரத்தை மீதப்படுத்த
நீரும் கற்றுக்கொண்டு
வீசப்பட்ட ஸ்ரோவால்
வீண் முயற்சியை விரட்டி
நேரம் பொன்னானது
கழிவுப் பொருள் பாவனை
உபயோகமானது என
இன்று புதுமைப்புரட்சி செய்து
அன்று வாழ்ந்த காக்கையிலும்
அறிவு புகட்டுகின்றீர்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## கற்றுக்கொண்ட பாடம்

மனிதனைப் பார்த்து காகமும் நீரை
உறிஞ்சியால் பருகப் பழகிக்கொண்டது
எல்லோரும் தமது
வீடுகளில் நல்ல
பண்புள்ளவர்களாக வாழ்ந்தால்
கற்றுக்கொண்ட காக்கையைப்போல்
பிள்ளைகளும் அதைப்பார்த்து
அன்போடும் பண்போடும் பழகி
நல்ல சமுதாயத்தை
உருவாக்குவார்கள்

துரை
தென்மட்டுவில்

## சாதனை

மனிதர்களின்
சாதனை போன்று
எங்களால் சாதனை
செய்யமுடியும் என்று
கல்லுப்போட்டு
தண்ணீரைப் பருகிய
அறிவுள்ள காகம்- இன்று
குழாய்முலம்
தண்ணீர் பருகி
சாதனை புரிகின்றதோ

அ.அன்ரனி
யாழ்ப்பாணம்

## நவீனம்

விந்தையான உலகிதில்
விஞ்ஞான வளர்ச்சி
விரிவடைகின்றதென்பதை
விபரிக்க இவ்
விளக்கம் போதாதா?

ம.சுமதி

## (ஏ)கால மாற்றம்

காலமாற்றம்
கனகச்சிதமாய்
காகத்தின் நடத்தைக்
கோலத்தில்
அரும்பத விளக்கம்
ஆறறிவு ஜீவனுக்கு

க.ஞானசீலன்
கொற்றாவத்தை

## கால வளர்ச்சி

கல் இட்டு தண்ணீர்
குடித்த காலம் அக்காலம்
இன்று கைக் கணனியில் அல்லவா
உலகம் தெரிகிறது
இது நாளைய எதிர்காலத்தின்
வளர்ச்சியா? இல்லை வீழ்ச்சியா?

ரி.விஜிதா
மயிலிட்டி

## காலமாற்றம்

காலம் மாறியதை
காட்டுது காகம்
மனிதா நீயும்
மாறி வாழ்ந்திடு என்று
ஏலும் என்கிற
ஐயறிவு பறவை
ஏன் உன்னால்
முடியாது மனிதா?

கணபதிதாசன்

## வீழ்ச்சியும் வளர்ச்சியும்

காக்கையாரே!
காலம் மாறுவதை காண்கையில்
கண்ணெதிரே என் வளர்ச்சி பெருகுகையில்
கலங்குகின்றன நரியினம்- தமது
சூழ்ச்சிகள் பலிக்காமல்
வீழ்ச்சிகள் வரலாமென...

வீ.வீனிஸ்
சாந்தை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -171



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



எனும் முகவரிக்கு 19.09.2013 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு ஒரு உதாரணம் கூறுங்களேன்?

ஞானப்பழம் வாங்கிய பிள்ளையார் தான். அதற்காய் முருகன் முயற்சி செய்யவில்லை என சொல்லமுடியாது. முயற்சி செய்யும்போது ஒன்றுக்கு மூன்று முறை சிந்தித்து செயற்பட வேண்டும். எண்ணத்தில் தோன்றியதை உடன் செய்தால் முருகன் போல் மயிலில் ஏறி உலகைச் சுற்றிவர வேண்டும் எண்ணத்தில் தோன்றியதை நன்றாக சிந்தித்து செயற்பட்டால் அம்மை அப்பனே உலகென்று அவரைச் சுற்றி வந்து ஞானப்பழத்தை பெற்று விடலாம்.

---

கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்

அன்பின் வியாசரே!

நீங்கள் சீதனம் வாங்கியா கல்யாணம் செய்தீர்கள்?

அன்று சீதனம் வாங்கினேன். அதற்கு பரிகாரமாய் இன்றுவரை என் வீட்டில் சிரமதானம் செய்து கொண்டிருக்கிறேன் கணவனாக...

---

**அன்பு வாசகர்களே....!**

**உங்கள் கேள்விகளை**
**ஆசிரியர், வியாசர் பதில்கள்**
**இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்**

க.கபில்ஸ்ரன்

அன்பின் வியாசரே!

உண்மைக்காக அநியாயத்தை எதிர்ப்பதா? அல்லது அநியாயத்திற்காக உண்மையை எதிர்ப்பதா? எது சிறந்தது. இதற்கு உங்கள் பதில் என்ன?

உண்மைக்காக அநியாயத்தை எதிர்க்கும்போது உண்மை வெல்லும். அநியாயத்திற்காக உண்மையை எதிர்க்கும் போது உண்மை சொல்லும்.

---

**காதலுக்கும் நட்புக்கும் என்ன வித்தியாசம்?**




நிறோஜி, உரும்பிராய்

அன்பின் வியாசரே!

காதலுக்கும் நட்புக்கும் என்ன வித்தியாசம்?

வாசர் வைத்துப் பூட்டிய நட்டைப் போன்று நட்பு இறுக்கமும் உறுதியுமாய் இருக்கும். வாசர் வைத்துப் பூட்டாத நட்டைப் போன்று காதல் அதிகமாக இறுக்கினாலும் இறுக்காவிட்டாலும் பிடுங்கிக் கொண்டு போய் விடும். விளக்கம் போதுமா?

---

**முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு ஒரு உதாரணம் கூறுங்களேன்?**

கணபதிதாசன், கட்டைக்காடு

அன்பின் வியாசரே!

ஏழ்மை என்பது எதுவரையில்? தங்கள் கருத்து என்ன?

வியர்வையையும் வேலையையும் விரும்பாத வரை ஏழ்மை இருக்கும்.

---

எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்

அன்பின் வியாசர் அண்ணாவே!

முதியோர்கள் முன்பு கூறுவார்கள் காவோலை விழும் போது குருத்தோலை சிரிக்கிறது என்று. நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

காவோலை விழ குருத்தோலை சிரித்தது அன்று. அந்த குருத்தோலை சிரிக்கிற சிரிப்பில் பனையே விழுந்து விடுகிறது இன்று.

---

**கொஞ்சம் சிரிங்கப்பா...**



"உன் மாமியாரின் புகைப்படத்தை 'அஞ்சல் தலை'யாக வெளியிட இவ்வளவு ஆர்வமாக பணம் கட்டி விண்ணப்பிக்கிறாரே.. அவ்வளவு பாசமா?"

"அட நீ வேறே... அப்பதானே போஸ்ட்மேன் அவுங்க மூஞ்சிமேல 'நச்... நச்னு' முத்திரை குத்துவார்... அதுல எனக்கொரு சின்ன ஆனந்தம்!"

சி.றெபேக்கா, மட்டுவில்

அன்பின் வியாசரே!

ஆண்கள் வீட்டிலிருக்க பெண்கள் வேலைக்குச் செல்வது ஏன்?

கண்டிப்பாக அவர்கள் இரவு வேலை பார்ப்பவர்களாகத்தான் இருக்க வேண்டும். கண்ணால் காண்பது பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய்.

---

தர்ஷிகா, யாழ்ப்பாணம்.

அன்பின் வியாசரே!

புளிய மரத்தில் மட்டுமா பேய் பிசாசு உலாவும். ஏன் ஏனைய மரங்களில் இருப்பதில்லை?

என்னில் பேய் பிசாசு இருக்கிறது என புளியமரம் எப்போதாவது சொல்லியிருக்கா? நீங்களா ஒரு கற்பனையை பண்ணிட்டு இப்படி பீதிய கிளப்பி விட்டா புளிய மரம் பாவமெல்லா?

---

# பிரான்சில் உள்ள இலங்கையரை நாடு கடத்த வேண்டாம்

## ஐரோப்பிய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

இலங்கையரை நாடுகடத்தவேண்டாம் என பிரான்சுக்கு ஐரோப்பிய மனிதவுரிமை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி இலங்கைத் தமிழர் ஒருவரை நாடு கடத்தவேண்டாம் என பிரான்ஸ் அரசாங்கத்திற்கு ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் வரையில் குறித்த இலங்கைத் தமிழரை நாடு கடத்தும் நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளது.

புலிகளுடன் இணைந்து செயற்பட்ட காரணத்தால் இலங்கை அதிகாரிகள் தம்மை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக இவ்வாறு தாம் அடைக்கலம் கோரியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். 2011ஆம் ஆண்டில் குறித்த இலங்கை தமிழர் பிரான்சில் புகலிடம் கோரியிருந்தார். எனினும் இந்த புகலிடக் கோரிக்கையை பிரான்ஸ் நிராகரித்துள்ளது. தம்மை நாடு கடத்தினால் தமக்கு இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் ஏற்படக்கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சித்திரவதைகளுக்கு எதிரான பிரகடனத்திற்கு புறம்பான வகையில் பிரான்ஸ் தன்னை நாடு கடத்த முயற்சிப்பதாக குறித்த நபர் ஐரோப்பிய மனிதவுரிமை நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

மனு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும் வரையில் குறித்த நபரை நாடு கடத்தும் நடவடிக்கையை தற்காலிக அடிப்படையில் இடைநிறுத்தி வைக்கும்படி ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(செ-2)

# அமைச்சர் வாக்களிக்க அனுமதி மறுப்பு

வடமேல் மாகாண சபைக்காக சிலாபம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில் வாக்களிக்க சென்ற அமைச்சரொருவர் தமது வாக்கை அளிப்பதற்கு அங்கு கடமையி லிருந்த அதிகாரிகள் அனுமதி மறுத்துவிட்ட னர்.

கட்டுநேரிய சென் செபஸ்டியன் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிக்கு வாக்களிக்க சென்ற அமைச்சர் தயாசித்த சிசேராவுக்கே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டையை எடுத்துச் செல்லாமையை அடுத்தே வாக்களிப்பதற்கு அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் வீட்டுக்கு திரும்பிய அமைச்சர் அடையாள அட்டையுடன் சென்று வாக்களித்துள்ளார்.

(செ-2)

# இலங்கைக்கு போர்க்கப்பலை இந்தியா வழங்குவது தவறு

## சுட்டிக்காட்டுகிறார் ஞானதேசிகன்

(சென்னை)

இலங்கை அரசுக்கு இந்திய மத்திய அரசு இன்றைய சூழ்நிலையில் போர்க்கப்பலை வழங்குவதென்பது தவறான முடிவாகும். இதை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம் என காங்கிரஸ் தலைவர் ஞான தேசிகன் தெரிவித்துள்ளார்.




தமிழ் நாட்டின் வடக்கு மாவட்டங்களைச் சேர்ந்த 150 இளைஞர் களுக்கு சத்திய மூர்த்தி பவனில் நேற்றைய தினம் பயிற்சிமுகாம் நடைபெற்றது. இதை அவர் ஆரம்பித்து வைத்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

சமூக வலைத்தளங்களான டியூட்டர், பேஸ்புக், யுடியூப் போன்றவற்றின் மூலம் பிரசாரம் செய்தால் எளிதில் அது மக்களைச் சென்றடையும். அத்தோடு இளைஞர்களையும் கவரலாம். எனவே காங்கிரசின் சாதனை மற்றும் திட்டங்களை சமூக வலைத்தளங்கள் மூலம் பிரசாரம் செய்ய காங்கிரஸ் மேலிடம் உத்தரவிட்டுள்ளது.

அதற்காக தமிழ் நாட்டில் காங்கிரசைச் சேர்ந்த இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு சென்னையிலும் அடுத்து கோவை, மதுரை திருச்சியிலும் பயிற்சி முகாம் நடைபெறுகின்றது.

தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண இரண்டு வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. அதில் ஒன்று இராமேஸ்வரம் கடலை ஆழப்படுத்தி இந்துமகா சமுத்திரத்துக்கு சென்று மீன்பிடிக்க வழிவகை செய்வது.

ஏனையது இருநாட்டு மீனவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பது. இலங்கைக்கு மத்திய அரசு இன்றைய சூழ்நிலையில் போர்க் கப்பலை வழங்குவது தவறான முடிவு. இதை மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம் என்றார்.

(செ-2)

## சிகரெட் பெட்டி காட்சிப்படுத்தலில்

# உருவப்பட எச்சரிக்கைக்கு இடைக்கால தடைவிதிப்பு

சிகரெட் பெட்டிகளில் உருவப்பட எச்சரிக்கை விளம்பரப்படுத்த வேண்டும் என்று சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

புகைத்தலால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து சிகரெட் பெட்டிகளில் 80 வீதம் விளம்பரம் செய்யப்பட வேண்டும் என சுகாதார அமைச்சு 2012 வர்த்தமானி ஊடாக கட்டளை பிறப்பித்திருந்தது.

அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கே இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட குறித்த வர்த்தமானிக்கு எதிராக இலங்கை புகையிலை நிறுவனம் மனுத்தாக்கல் செய்திருந்தது.

அந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான சலீம் மர்சூக்ற, சந்தியா ஹெட்டிகே மற்றும் ஈவா வனசுந்தர ஆகியோர் முன்னிலையிலேயே இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தத் தடை உத்தரவு 2014 ஜனவரி 22 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (செ-2)



# சிறுவர் அரங்கம்

582

## பால் குடிக்காத பூனை

ஒரு முறை, விஜயநகரம் எண்ணற்ற எலிகளால் தொல்லையுற்றது. மக்கள் மன்னரிடம் இதுபற்றி முறையிட்டனர்.

"தயவுசெய்து எங்களை இவற்றிடமிருந்து காப்பாற்றுங்கள், மன்னரே! அவை எங்களது பயிர்களையும் தானியங்களையும் அழிக்கின்றன".. என அவர்களின் தலைவன் முறையிட்டான்.

"கவலைப்படாதீர்கள்! இப்பிரச்சினையைப் பற்றி எனது அமைச்சர்களிடம் ஆலோசித்துள்ளேன். அவர்கள், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பூனை வளர்க்கப்பட வேண்டும் என யோசனை கூறியுள்ளனர். பூனைகள் எலிகளையும், கண்டெலிகளையும் பிடித்துத் தின்றுவிடும்" என பதிலளித்தார் கிருஷ்ணதேவராயர்.

"இது ஒரு நல்ல யோசனைதான். ஆனால் எவ்வாறு நாங்கள் பூனைக்கு உணவளிப்பது?" என்று ஒருவன் கேட்டான்.




"ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பசுவைத் தருகிறேன். பசுவின் பால் பூனைகளுக்கு அளிக்கப்பட வேண்டும்" என்றார் மன்னர்.

பாரசீகத்திலிருந்து ஆயிரம் பூனைகள் வரவழைக்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பூனை. ஒரு பசு அனுப்பப்பட்டது. பசும்பாலைக் குடித்து பலசாலியாகும் பூனைகள் எலிகளை எதிர்க்க முடியும் என எண்ணினார் கிருஷ்ணதேவராயர்.

எல்லோரையும்போல் தெனாலிராமனும் ஒரு பூனை, ஒரு பசு ஆகியவற்றை வீட்டுக்கு எடுத்துச் சென்றான்.

விஜயநகரத்துப் பூனைகள் விரைவில் வளமையாகவும், பலசாலியாகவும் மாறின. அவற்றின் எஜமானர்கள் அவற்றுக்கு தினமும் நிறைய பாலை ஊற்றினர்.

மற்றொரு புறம் தெனாலிராமன் எல்லா பாலையும் பூனைக்கே கொடுப்பது மிகவும் தவறு என நினைத்தான். முதலில் அவன் சுடச்சுட ஒரு கோப்பைப் பாலை மட்டும் பூனைக்கு வைத்தான். ஆனால் பூனையோ, பாலை ஒரு முறை நக்கிவிட்டு 'மியாவ்' என அலறியவாறு ஓடிவிட்டது.



அதன் பிறகு அது பாலைக் குடிக்கவே மறுத்தது. ராமனும் அவனது குடும்பத்தினரும் பசும்பாலை விரும்பிக் குடித்தனர்.

சில மாதங்கள் கழித்து, தான் அளித்த பூனைகள் எவ்வாறு உள்ளன என்பதைக் காண கிருஷ்ணதேவராயர் நினைத்தார். அவர் அனைத்து மக்களும் தமது பூனையுடன் அரசவைக்கு வரவேண்டுமென அழைத்தார்.

அனைவரது பூனைகளும் வளமையாக, பலமாக உள்ளதைக் கண்டு மன்னர் இன்புற்றார். ஆனால், தெனாலிராமனின் பூனை மட்டும் எலும்பும் தோலுமாக இருப்பதைக் கண்டார்.

மன்னர் இதனைக் கண்டு ஆச்சரியப்பட்டார். "என்ன இது, ராமா? உனது பூனன்யை சரியாக கவனிக்கவில்லையா? ஏன் இப்படி மெலிந்து பலமில்லாமல் உள்ளது?" எனக் கேட்டார்.

தெனாலிராமன் தனது தோள்களைக் குலுக்கினான்.

"நான் என்ன செய்வேன் மன்னா? நான் பூனையின் முன்னால் பாலை மட்டும் தான் வைக்க முடியும். அதனைக் குடிக்கச் செய்ய இயலாது அல்லவா? நீங்கள் எனக்களித்த பூனை பாலைக் கண்டாலே ஓடிவிடுகிறது", என ராமன் பதிலளித்தான்.


"என்ன வியப்பு! பாலைக் கண்டால் ஓடிவிடும் பூனையை நான் இதுவரை கண்டதில்லை!" என கிருஷ்ணதேவராயர் வியப்பில் ஆழ்ந்தார். "காவலர்களே! போய் ஒரு கோப்பை பாலைக் கொண்டு வந்து பூனையின் முன்னால் வையுங்கள். ராமா, நீ கூறுவது உண்மையானால், நான் ஒரு பை நிறைய தங்க நாணயங்களைப் பரிசாக அளிப்பேன்" என்றார் மன்னர்.


மன்னரின் ஆணை உடன் நிறைவேற்றப்பட்டது. காவலர்கள் பூனையின் முன்னால் ஒரு கோப்பைப் பாலை வைத்தனர். அனைவரும் ஆச்சரியப்படும் வகையில், பூனை 'மியாவ்' எனக் கத்தியவாறு பாலைக் கண்டதும் ஓடியது.

"ஹ்ம்!" என பெருமூச்சு விட்டவாறு கிருஷ்ணதேவராயர் ஓடும் பூனையைப் பிடித்துக் கொண்டு வருமாறு காவலர்களிடம் ஆணையிட்டார். அதன்படி காவலர்கள் செய்தனர்.

அவர் பூனையின் வாயைத் திறக்குமாறு கூறினார். அதனைப் பரிசோதித்தார்.

"ஆஹா! நான் நினைத்தது போன்றே உள்ளது! அந்த பாவப்பட்ட மிருகத்தின் வாய் பயங்கரமாக வெந்திருக்கிறது. ராமா! எப்படி இவ்வாறு நடந்தது? நீ பூனைக்கு மிகவும் சூடான பாலை வைத்துள்ளாய் என்பது எனக்கு விளங்குகிறது. அதனாலேயே பூனை பாலைக் கண்டால் ஓடுகிறது!" என்று அவர் கூறினார்.





(தொடரும்)

# சாமியாராகவும் இல்லை, சம்சாரியாகவும் இல்லை!




ஆன்மீகம் 121

செல்வச் செழிப்பில் இருந்த சினிமாவை விட்டு பெரம்பலூர் தலையாட்டி சித்தரைப் பார்த்தேன். கண்டேன் உலக மாகா இரகசியத்தை சித்தர் பெருமான் சொன்னார்: "இந்த உலகம் உனக்கு வேண்டுமா? இதோ! இந்த மந்திரத்தைச் சொல்லி வடை, பாயாசத்துடன் சாப்பாடு போடு. செத்தவனும் பிழைப்பான். மழை வேண்டிய அளவு பொழியும்".

அதற்கு நான் "எனக்கு எது தேவையோ அது உங்களுக்குத் தெரியும்; அதுவே என் வேலை" என்றேன். அதற்கு அவர் "சரி சினிமா வேண்டாம். இப்போது நல்ல கதைகள் இல்லை. எந்த விந்து சக்தி உடலில் இருந்தால் குண்டலி சக்தி காணமுடியுமோ, அதையெல்லாம் வெளியேற்றும் அற்ப கதைகள் வெளியாகிறது. மீண்டும் இராமாயணம் மகாபாரதம், மாயா ஜாலக் கதைகளை மக்கள் விரும்பிப் பார்ப்பார்கள். (1984)

36 வருடங்கள் முடிகின்ற நேரம் வரும் அப்போது இந்த உலகமே என் மூசாகோட்டை- இந்தக் கன்னி தீவின் மாயாஜால மர்மத்தைக் காண கோடான கோடி மக்கள் வருவார்கள். இவ்வுண்மையை அறிந்து நீ முன்னேறு. ஒரு இலட்சம் பேருக்கு அன்னதானம் செய்தவனை விட்டு எப்படிப்பட்ட பாவமும் பறந்துவிடும். நீ சித்தர்களின்



சித்தர் ஆச்சிரமத்தில் அன்னதானம் அளித்தல்

பொருளைப் பெற்று உலக மக்களைக் காப்பாற்று. சித்தர்களின் பொருள் கிடைத்தால், அமெரிக்கா உன்கையில் பேரிக்கா போலாகிவிடும். அந்தப் பொருளைப் பெற உன் சொந்த உழைப்பில் ஒரு கோடி பேருக்கு அன்னதானம் செய். உன்னால் அது முடியும்" என்றார்.


எனது 24 வயதிலிருந்து 29 வயது வரை சித்தருடன் வாழ்க்கை. பிறகு, தண்டையார் பேட்டை. அதாவது பாம்பாட்டி சித்தருடன் 32 இலிருந்து 36 வயது வரை குரு சேவை கற்றேன். தண்டையார் பேட்டை பாம்பாட்டி சித்தர் சொன்ன அறிவுரைதான் என்றும் என் வாழ்வில் இனிக்கிறது. "ஞானத்தைத் தேடிப் போகும் உனக்கு ஓர் நல் வழி சொல்கிறேன் கேள்" என்றார். "ஒரு பெண்ணிடம் ஆழாக்கு அரிசியைக் கொடுத்து சமைக்கச் சொல்லிச் சாப்பிட்டுப்பார். ஞானம், தானாக வந்துவிடும்" என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. "கல்யாணம் செய்துகொள்" என்றார். "பெண்ணுக்கு எங்கே போவது?" என்றேன். "உனக்கென்று அவள் காத்திருப்பாள்" என்றார்.

கல்யாணம் ஆனவரை இல்லறத்தான் என்றும் ஆகாதவரை பிரம்மச்சாரி என்றும் அழைப்பார்கள். தன்னுடைய அறிவைக்காக்கவே, தலைகள், சாகா தலைகளாக இருக்கவேண்டும் என்பதற்காகவே, சந்ததி இருக்க வேண்டும், என்ற நோக்கத்தில் சித்தர்கள் திருமணம் செய்துகொண்டார்கள்.

இன்றும் எத்தனையோ பேர் பத்தினித் தெய்வங்களாய் இறை காரியங்களுக்கு உறுதுணையாய் கணவனே கண்கண்ட தெய்வம் என்று வாழ்பவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓர் துணைவியார் தான், என் வாழ்க்கைத் துணையாக அமைந்திருக்கிறார். (தொடரும்)

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

# வடக்கு தேர்தலில் தமிழ்த்தேசியமே வெற்றியின் தீர்மானத்துக்குரியது!



அரசாங்கம் அபிவிருத்தி பற்றி பேசுகிறது. இலங்கை மத்திய வங்கி வடபகுதி பொருளாதாரத்தில் 24 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளதாக கூறுகின்றது. ஆனால், 24 சதவீதவளர்ச்சியை வீதி அபிவிருத்தியில் தான் பார்க்க முடிகிறது.

அபிவிருத்தி அடைந்துள்ள வீதிகளுக்கு இரு மருங்கிலும் வாழும் மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டுவரவில்லை. அபிவிருத்தி போதும், அதிகாரப் பரவலாக்கல் தேவையில்லை என்று தமிழ் மக்களுக்கூடாக வட மாகாணசபைத் தேர்தலின் மூலம் உலகத்துக்கு இச்செய்தியை தெரிவிக்க அரசாங்கம் விரும்புகிறது.

தமிழ் மக்கள், தாமாக அணி திரண்டு வாக்குச் சாவடிகளை நோக்கிச் செல்வதற்கு அரசாங்கத்தின் மேற்கூறிய இலங்கை நோக்கிய பயணம் ஒன்றே போதுமானதாகும். பெரும்பாலான தமிழ் மக்களைப் பொறுத்து, அரச தரப்பாரின் வெற்றி என்பது தமிழ்த் தேசியத்தின் தோல்வி என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

அந்த வகையில் தமிழத் தேசியம் தோற்றுப் போகக்கூடாது என்பதற்காக தேசியத்தின் பெயரில் ஒரு தடியை, தேர்தலில் நிறுத்தினாலும் தமிழ் மக்கள் வாக்களிக்கத் தயங்க மாட்டார்கள். அத்தகைய ஒரு பலம் வாய்ந்த கதாயுதத்தையே பெரும் பலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னகத்தே வைத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உருப்படியான அரசியல் நிகழ்ச்சிநிரலோ, மக்களுடனான அடிமட்டத் தொடர்புகளோ, வெற்றியின் பின்னர் என்ன செய்வது என்ற, கொள்கைகளோ கோட்பாடுகளோ இல்லை. இது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும் ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து நிற்கின்றனர்.

அந்த வகையில் வடமாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெறுகின்ற வெற்றியானது, தமிழ்த் தேசியத்தின் வெற்றியாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்றுவிடக்கூடாது, என்ற தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கையின் எதிரொலியாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமையிலான அரசாங்கத் தரப்பை பொறுத்தவரை, போரில் வெற்றி பெற்றபோதும், மக்களின் மனதை வெற்றி கொள்வது கடினமான செயல் என்பது தெரியும்.

அதனால் தான், தமிழ்த் தேசியக் கூட்டமைபம்பின் பலவீனம், அது விட்ட தவறுகள் போன்றவற்றை தனக்கான பலமாக ஆக்கிக் கொள்வதில் வியூகங்களை வகுத்துச் செயற்பட்டது அரசாங்கம்.

தமிழத் தேசியக் கூட்மைப்பு, கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் 38 சதவீத இந்திய வம்சாவளி மக்களுக்கென ஒரு வேட்பாளரைக் கூட நிறுத்தவில்லை. பிரதேச சபைத் தேர்தலினபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவானவர்களில் ஐந்து பேர் இந்திய வம்சாவழி மக்களைச் சார்ந்தவர்களாவர்.

பிரதேச சபைகளில் இடம் கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மாகாணசபையில் இட ஒதுக்கீடு செய்யவில்லை என்ற அதிருப்தி இந்திய வம்சாவழி மக்கள் மத்தியில் உள்ளது.

போராட்ட காலத்தன்போது தமது பிள்ளைகளை பெருமளவில் போராளி களாக கொடுத்தது இந்தச் சமூக மாகும்.

உண்மையில் உள்ளக சுநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சியை முறையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ளது.

காலம் தாழ்த்தி, காலநேரம் பார்க்காது முன்வைத்துள்ள உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறையிலான தீர்வு தேர்தல் கால ஆடுகளத்தில் பந்தாடப்படும் நிலைக்குச் சென்றுள்ளது.

கூட்டமைப்பு, அரசாங்கத் தரப்புடன் பேச்சுவார்தையில் ஈடுபட்ட கால கட்டத்தில் மேற்படி கோரிக்கையினை முன்வைத்திருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமை என்பதும் அதிகாரப்பரவலாக்கல்கள் என்பதும் தேர்தல் கால கோசங்கள் என்ற நிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுவந்திருக்கிறது.

மொத்தத்தில் அரச தரப்பினதும் கூட்டமைப்பினதும் பலம், பலவீனங்களுக்கிடையிலான பலப் பரீட்சையாக வடமாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இருந்தபோதும் வெற்றி வாய்ப்பையும் அறுதிப்பெரும்பான்மையையும் தீர்மானிப்பது தமிழ்த் தேசியமே.

(முற்றும்)

-இணையம்-

# இலங்கையிலிருந்து லண்டன் நோக்கி பயணித்த எயார்லைன்ஸ் விமானம் தரையிறக்கம்

## சந்தேகத்தின் பேரில் பயணிகள் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பில் இருந்து லண்டன் நோக்கி பயணித்த இலங்கை எயார்லைன்ஸ் விமானம் திடீரென தரையிறக்கப்பட்டுள்ளது.

267பயணிகளை ஏற்றிச் சென்ற விமானமே அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

அதில் பயணித்த இருவர் விமானத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள் என்ற சந்தேகம் ஏற்படவே இடையில் கிழக்கு லண்டனிலுள்ள ஸ்டான்டெட் விமான நிலையத்தில் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஏ 330 என்ற இலக்கமுடைய விமானம் கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் 267 பயணிகளுடன் லண்டன் ஹீத்ரு விமான நிலையம் நோக்கி புறப்பட்டது.

இந் நிலையில் அதில் பயணித்த இருவர் விமானத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவர்கள் என்ற சந்தேகம் எழுந்த போது விமானம் அவசரமாக கிழக்கு லண்டனிலுள்ள ஸ்டான்டெட் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

இதனையடுத்து விமானத்துக்குள் பிரவேசித்த எசெக்ஸ் நகரப் பொலிஸார் அங்கு விமானத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய வர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட இரண்டு பேரைக் கைது செய்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட இரண்டு பேர் தொடர்பிலும் விசாரணைகள் தொடர்கின்றன. (செ-2)

# தேர்தல் வன்முறைகளில் அதிகமானவை இராணுவத்தினராலேயே முன்னெடுப்பு

## சுரேஷ் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

வாக்களிக்க சென்ற மக்களை இராணுவ புலனாய்வாளர்கள் தடுத்து நிறுத்தி அச்சுறுத் தியுள்ளமை தேர்தல்வன்முறையை இனங்கட்டியுள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரமேச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை தேர்தலுக்கான தனது வாக்கை பதிவு செய்துவிட்டு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இதுவரை நடைபெற்ற தேர்தல் வன்முறை சம்பவங்களில் அதிகமானவை இராணுவத்தினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று (நேற்று) கூட இராணுவத்தினர் வாக்களிக்க சென்ற வலி. வடக்கு மாதகல் பிரதேச மக்களை வாக்களிக்க செல்ல விடாது தடுத்து நிறுத்தியதுடன், அவர்களை வாக்களிக்க கூடாது எனவும் அச்சுறுத்தியுள்ளார்கள்.

இது தொடர்பாக நாம் தேர்தல் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்துள்ளோம் என சுரேஷ் எம்.பி தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எதிரான துண்டுபிரசுரங்கள் நேற்று முன்தினம் யாழில் பல பகுதிகளில் மக்களிடம் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-2)

# மூன்று வாகன விபத்துக்களில் நான்கு பேர் பலியாகினர்

(கொழும்பு)

கடுகஸ்தோட்ட பொலிஸ் பிரிவின் கடுகஸ்தோட்ட-குருநாகல் வீதி எலதெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

குருநாகலில் இருந்து நேற்று முன்தினம் கண்டி நோக்கி பயணித்த லொறியொன்று, அதற்கு எதிர்த்திசையில் பயணித்த காருடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கார் சாரதியும் அதில் பயணித்த மற்றொருவரும் படுகாயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மொரட்டுவை மெண்டிஸ் வீதியில் மோட்டார் சைக்கிளுடன் துவிச்சக் கரவண்டியொன்று மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச்சம்பவத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர், படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக களுபோவில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


மேலும் வெலிகம பொலிஸ் பிரிவில் காலி-மாத்தறை பிரதான வீதியின் மிரிஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்திலும் ஒருவர் பலியாகியுள்ளார்.

காலியில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியொன்று சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த சம்பவத்தில் முச்சக்கரவண்டி சாரதியும் இருக்கையில் அமர்ந்து சென்ற அவரது மனைவி மற்றும் உறவினர் ஒருவரும் படுகாய மடைந்த நிலையில் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட னர்.

இதில் 52 வயதான சாரதி உயிரிழந்ததுடன் மற்றைய இருவரும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.(செ-2)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நிறுவுநரும் முன்னாள் அதிபருமாகிய அருட்தந்தை ஜேம்ஸ் லின்ஸ்ன் திருவுருச்சிலை கல்லூரியின் றொமைன்குக் மண்டபத்திற்கு முன்னால் அண்மையில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. திருவுருவச்சிலையை அருட்தந்தை கலாநிதி ஏ.டபிள்யூ ஜெபநேசன், கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் ஆகியோர் இணைந்து திரைநீக்கம் செய்து வைப்பதையும் திருவுருவச்சிலையையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாகம் செய்தியாளர்)

# மற்றொரு வாக்களிப்பு நிலைய குளவிக் கூடு அகற்றப்பட்டது

வவுனியாவில் மற்றுமொரு வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ள பட்டானிச்சூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் காணப்பட்ட குளவிக் கூடொன்று நேற்று சனிக்கிழமை காலை வவுனியா மலேரியா தடை இயக்கத்தினரால் அழிக்கப்பட்டது.

வாக்களிப்பு ஆரம்பமாகுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாகவே முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் உள்ள மரமொன்றில் காணப்பட்ட இக் குளவிக்கூடு,

வவுனியா அரசாங்க அதிபரின் உத்தரவின் பேரில் மலேரியா தடை இயக்கத்தின் பொறுப்பதிகாரி தி.கோபிநாத் தலைமையிலான குழுவினரால் அழிக்கப்பட்டது.

வவுனியா, புதுக்குளம் மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு கடமைக்கு சென்ற அதிகாரிகள் மீது நேற்றுமுன்தினம் குளவிகள் கொட்டியதில் ஒருவர் பலியாகியதுடன், இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-2)

# இத்தாலி கடற்பரப்பில் தத்தளித்த இலங்கையர் உட்பட 32 பேர் மீட்பு

இலங்கை மற்றும் பாகிஸ்தான் பிரஜைகள் உட்பட 32 பேரை ஏற்றிச் சென்ற படகொன்றை இத்தாலிய கடலோர காவற்படையினர் மீட்டுள்ளனர்.

குறித்த படகு எரிபொருள் இன்றியும் இயந்திர கோளாறினாலும் கடலில் மூழ்கிக் கொண்டிருந்த வேளை இத்தாலிய கடலோர காவற்படையினரால் படகு ம் மீட்கப்பட்டுள்ளது. அதில் இருந்தவர்களும் மீட்கப்பட்டுள்ளனர்.

இத்தாலியின் ரோஜயோ கலாபிறியா மாகாணத்தின் ரோசெல்லா யோனிகா கடற்கரையில் இருந்து 100 கடல் தொலைவில் இருந்த படகு ஒன்று மூழ்கிக் கொண்டிருந்ததாக இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

படகில் இருந்தவர்களை அடையாளம் காண்பதற்காக அவர்கள் ரோசெல்லா யோனிகா கடற் கரைக்கு அழைத்துவரப்பட்டுள்ளதாக இத்தாலி தகவல்கள் தெரிவிக்கின்றன.(செ-2)

# தமிழ் மாணவர்களுக்கு காப்புறுதி திட்டம்

## பிரபா கணேசன் எம்.பி.தகவல்

கொழும்பு மாவட்டத்தில் உள்ள சுமார் 46 தமிழ் பாடசாலைகளில் 35 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மாணவ, மாணவிகள் கல்வி பயில்கின்றார்கள். பாடசாலை நேரத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்கள், சுகயீனம் போன்றவற்றுக்கு பரிகாரமாக அவர்களுக்கான காப்புறுதி திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளேன் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் ஊடகங்க ளுக்கு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது,

பெரும்பான்மையின பாடசாலை மாணவர்களுக்கு பலவிதமான அரச வரப்பிரசாதங்கள் கிடைக்கப் பெறுகின்றன. அவற்றில் ஒன்று காப்புறுதித் திட்டமாகும். இவர்களுக்கு கிடைக்கும் இவ் அரச வரப்பிரசாதங்கள் , எமது தமிழ் பாடசாலை மாணவர்களுக்கும் கிடைக் கப்பெற வேண்டும். இது சம்பந்த மாக இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபன அதிகாரிகளிடம் நேற்று கலந் துரையாடப்பட்டது. இதனடிப்படையில் பாடசாலை நேரத்தில் ஏற்படும் விபத்துக்கள் சுகயீனம் போன்றவற்றிற்கு உடனடியாக நிவாரணம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதன்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவார்களேயாயின் அதற்குரிய கட்டணத்தை கூட்டுத்தாபனமே முழுமையாக செலுத்தும். இது எமது தமிழ் மாணவர்களுக்கு கிடைத்திருக்கும் அரியசந்தர்ப்பமாகும். மிகவும் குறைந்த கட்டணத்தையே காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியிருக்கிறது. மாணவர்களின் நலனுக்காக இச்சலுகை கட்டணத்தை வழங்கியுள்ள இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்த வாரமளவில் கூட்டுத்தாபன அதிகாரிகளிடம் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த காப்புறுதி மூலமாக மாணவர்களின் ஏழை எளிய பெற்றோர்களுக்கு ஏற்படக்கூடிய சுமை குறைக்கப்படவுள்ளது.

இச்சலுகை கட்டணத்தை சமூக நலன் விரும்பிகளின் மூலமாகவும் எனது அரசியல் தொழிற்சங்க கட்சியின் ஊடாகவும் செலுத்துவதற்கு முடிவு செய்துள்ளோம். ஆரம்பத்தில் கொழும்பு மாவட்டத்தில் கல்வி பயிலும்30ஆயிரத்திற்கும்அதிகமான தமிழ் மாணவர்களுக்கு இத்திட்டம் அமுல்படுத்தப்படும். அதன் பின்னர் ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை அமுல்படுத்த தீர்மானித்துள்ளோம். இதன் மூலமாக பெற்றோர்களுக்கு மட்டுமல்லாது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கான வேலைப்பளு குறைக்கப்படும்.

அடுத்தமாத முற்பகுதியில் இக் காப்புறுதி திட்டத்தை அமுல்படுத்தப்படுவதற்கான வேலைத்திட்டங்களைத் தாம் முன்னெடுத்துள்ளதாகவும் அடுத்தமாத இறுதிக்குள் இக் காப்புறுதிஅனைத்துகொழும்பு மாவட்ட மாணவர்களுக்கும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (செ-2)

## சர்வதேச குற்றவாளியான கே.பி. பிரசாரத்தில் ஈடுபட்டது எப்படி?

# கேள்வி எழுப்புகிறார் ரணில்

(கொழும்பு)

சர்வூதேசத்தினால் தேடப்பட்டு வருகின்ற குற்றவாளியான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவாக செய்தியாளர் மாநாட்டை நடத்துவதற்கு இராணுவம் எவ்வாறு வசதிகளை செய்து கொடுக்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இது நாட்டின் தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும். இது தொடர்பில் நான் தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்.

தேர்தல் ஆணையாளர் எனது கடிதத்துக்கு பதில் அளிப்பார் என்று எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேசத்தினால் தேடப்படுகின்ற ஒருவர் ஆளும் கட்சிக்கு சார்பாக தேர்தல் பிரசாரம் செய்வதற்கு இராணுவம் ஆதரவளிப்பதானது பொதுநலவாய மாநாட்டின் விதிமுறைமைகளையும் மீறும் செயலாகும்.

இந்த பின்னணியில் எவ்வாறு இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவது? எவ்வாறு பொதுநலவாய மாநாட்டின் தலைமைப் பதவியை கோருவது? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு விசேட கூற்று ஒன்றை விடுத்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-2)

# வடக்கு தேர்தல் குறித்து கவனம் செலுத்துகிறது கனடா

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தல் குறித்து கனடா கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலுக்கு முன்னதாக வடக்கில் பதிவான சில சம்பவங்கள் குறித்து கனடா கவனம் செலுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளது.

வேட்பாளர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்கு முறைகள் குறித்து கவனம் செலுத்தி வருவதாக கனடாவின் வெளிவிவகார மற்றும் சாவதேச மனித உரிமைகளுக்கான அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் தீபக் ஒபராய் தெரிவித்துள்ளார்.

அடக்கு முறைகள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவை எனவும் குறிப்பிட்டுள்ள அவர் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டியது அவசியமானதென்றும் தெரிவித்துள்ளார்.

அனைத்து தரப்பினரும் வன்முறைகளைத் தவிர்த்து நியாயமானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் இலங்கையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே கனடாவின் விருப்பம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-2)

# பொதுநலவாய மாநாட்டு பாதுகாப்புக்கு ஆயிரம் வெளிநாட்டு பொலிஸார்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டின் பாதுகாப்பு பணிகளுக்காக ஆயிரம் வெளிநாட்டு பொலிஸார் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

54 நாடுகளைச் சேர்ந்த நாட்டுத் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

எனவே இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் வெளிநாட்டு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக அந்நாட்டு உளவுப் பிரிவினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மாநாட்டின் போது செய்தி சேகரிப்பதற்காக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். (அ-2)

# தேர்தல் விதிமீறல்களில் ஈடுபடும் அரச அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

தேர்தல் விதிமீறல்களில் ஈடுபடும் அரச அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் தினத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மனித உரிமை ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் இவ்வாறு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொலிஸ் உத்தியோகத்தர்களோ அல்லது வேறும் அரச அதிகாரிகளோ குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடும் அதிகாரிகள் தொடர்பில் பொது மக்கள் முறைப்பாடு செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## தமிழக மீனவர்களின் தடுப்பால் இலங்கையுடனான உறவு பாதிக்கப்படும்

# ஜீ.கே.வாசன் எச்சரிக்கை

**இலங்கைச் சிறையிலுள்ள தமிழக மீனவர்களின் தடுப்புக் காவலை தொடர்ந்து நீடிப்பது கண்டனத்துக்குரியது. தமிழக மீனவர்களுக்கு துரோகம் செய்யப்படுமாயின் இந்தியா- இலங்கை உறவில் பாதிப்பு ஏற்படும் என இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜீ.கே.வாசன் எச்சரித்துள்ளார்.**

தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழக மீனவர்கள் மீது எதிர்வரும் காலங்களில் இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தவோ அவர்களை அச்சுறுத்தவோ கூடாது. தமிழக மீனவர்களைத் தாக்கிவரும் இலங்கை கடற்படையினருக்கு இந்தியா போர்க்கப்பல்களை வழங்கும் முடிவும் கண்டிக்கத்தக்கது.

இலங்கை போர்க்கப்பல்களை வழங்கக்கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்துவேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை இலங்கைக்கு வழங்கப்படவுள்ள இரண்டு கப்பல்கள் தொடர்பான யோசனையை இந்தியா காலந்தாழ்த்த வேண்டும் என்று இந்திய மத்திய அமைச்சர் ஜீ.கே.வாசன் கோரியுள்ளார். இந்திய மீனவர்கள் இலங்கையின் கடற்படையினரால் தாக்கப்படுவது நிறுத்தப்படும் வரை அந்த யோசனையை நிறுத்திவைக்குமாறு வாசன் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் முன்னர் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை தொடர்பில் தமிழக மக்கள் திருப்தி கொள்ளவில்லை. அது தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்புடையதல்ல என்று தமிழக மக்கள் எண்ணுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இலங்கையில் 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் மூலமே தமிழர்களுக்கான தீர்வை எட்டமுடியும் என்றும் வாசன் தெரிவித்துள்ளார். (செ-2)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

இலங்கை கடல் எல்லைக்குள் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 19 பேரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது. மாதகல் கடற்பரப்பில் வைத்து இந்த மீனவர்கள் நேற்றுமுன் தினமிரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் இந்திய மீனவர்களின் 5 மீன்பிடி படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன. இந்த மீனவர்கள் பொலிஸாரால் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (அ-2)




- ❖ 1499-சுவிட்சர்லாந்து விடுதலை பெற்று தனி நாடாகியது.
- ❖ 1784 - அலாஸ்காவின் கோடியாக் என்ற இடத்தில் ரஷ்யா தனது குடியேற்றத்தை ஆரம்பித்தது.
- ❖ 1877-யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் பத்திரிகையின் ஆசிரியராக தமிழறிஞர் அருளப்ப முதலியார் நியமிக்கப்பட்டார்.
- ❖ 1888 - நஷனல் ஜியோகிரபிக் மகசின் (National Geographic Magazine) முதலாவது இதழ் வெளிவந்தது.
- ❖ 1893 - அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட தானுந்து முதன் முதலாகக் காட்சிப்படுத்தப்பட்டது.
- ❖ 1908 - பல்கேரியா விடுதலையை அறிவித்தது.
- ❖ 1914 - ஜேர்மனியின் எம்டன் நாசகாரிக் கப்பல் இரவு 9:30 மணிக்கு சென்னை துறைமுகத்தையும் மற்றும் நகரப் பகுதிகளையும் குண்டு வீசித் தாக்கியது. மொத்தம் 130 குண்டுகளை அது வீசியது.
- ❖ 1955 - ஐக்கிய இராச்சியத்தில் ஐடிவி தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ 1960 - மாலிக் கூட்டமைப்பில் இருந்து செனகல் விலகியதை அடுத்து சூடானியக் குடியரசு மாலி எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- ❖ 1965 - இந்திய-பாகிஸ்தான் காஷ்மீர் தொடர்பாக இடம்பெற்ற போர் ஐநாவின் போர் நிறுத்த அழைப்பை ஏற்று முடிவுக்கு வந்தது.
- ❖ 1970 - மலேசியாவின் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தனது பதவியை விட்டு விலகினார்.
- ❖ 1980 - ஈரான் - ஈராக் போர்: ஈராக் ஈரானை முற்றுகையிட்டது.
- ❖ 1995 - யாழ். நாகர்கோயில் பாடசாலை மீது இடம்பெற்ற விமானத்தாக்குதலில் 30 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

**பிறப்பு**

- ❖ 1791-மைக்கேல் பரடே, ஆங்கில அறிவியலாளர் (இ. 1967)

**இறப்புகள**

- ❖ 1539 - குரு நானக்தேவ், சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் (பி. 1469)
- ❖ 2009 - ஆர். பாலச்சந்திரன், பேராசிரியர், கவிஞர்

### மைக்கேல் பரடே



மைக்கேல் பரடே பிரித்தானியாவைச் சேர்ந்த ஒரு வேதியியலாளரும், இயற்பியலாளரும் ஆவார். இவர் மின்காந்தவியல், மின்வேதியியல் ஆகிய துறைகளுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார். இக்காலச் சோதனைச்சாலைகளில் சூடாக்குவதற்கான ஒரு கருவியாக உலகளாவிய முறையில் பயன்படுகின்ற பன்சன் சுடரடுப்பின் ஆரம்ப வடிவத்தைக் கண்டுபிடித்தவர் இவராவார்.

இவர், உலக வரலாற்றில் மிகச் சிறந்த அறிவியலாளர்களுள் ஒருவராகக் கருதப்படுகின்றார். சில அறிவியல் வரலாற்று ஆய்வாளர்கள், அறிவியன் வரலாற்றின் மிகச் சிறந்த சோதனையாளராக இவரைக் குறிப்பிடுகின்றனர். இவருடைய முயற்சிகளின் காரணமாகவே மின்சாரம் பொதுவான பயன்பாட்டுக்கு உகந்த ஒன்றாக உருவானது எனலாம். 1967ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25 ஆம் திகதி இயற்கையெய்தினார்.


# பறவையின் பலம் அது அமர்ந்திருக்கும் கிளையில் அல்ல, அதன் சிறகுகளில் ...!

## தேர்தலும் தமிழ்மக்களும்

கிளை பலமானது என்று பார்த்து எந்தப் பறவையும் அமர்வதில்லை. எந்த நேரத்தில் கிளை முறிந்தாலும் பறக்க திடமான சிறகுகள் தன்னிடம் உள்ளன என்பதே பறவையின் பலம் அதுவே எமது பலமும்.

கூட்டமைப்புக்குக் கிடைத்திருக்கும் வாக்குகள் சிங்கள தேசத்தின் தேசிய அரசியலை தமிழ் மக்கள் நாம் ஏற்றுக்கொள்ள வில்லை என்பதை அப்பட்டமாக உலகுக்குக் காட்டும் விடையமாக அமையும்.

அரசாங்கம் இந்தத் தேர்தலை நடத்தியது ஒன்றும் தமிழ் மக்களுக் கான ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொண்டு அல்ல. அவருக்கு இறுகிக் கொண்டே வரும் சர்வ தேச அழுத்தங்களில் இருந்து தற்காலிகமாக ஓரளவுக்கு தன்னை சுதாகரித்துக்கொள்ளவே என்பது அனைவருக்கும் தெரிந்த பெரிய உண்மையாகும்.



இலங்கைத் தீவினில் ஜனநாயக உரிமைகள் செழித்தோங்குவதாகவும், நல்லிணக்க சூழல் உருவாகிவருவதாகவும், வெளி உலகுக்குக் காட்டுவதன் மூலம் பொது நலவாய தலைமையில் எந்தவித எதிர்ப்புகளும் முணு முணுப்புகளும் இன்றி ஏறி அமர்ந்து விட்டால் இனப்படுகொலை சர்வ தேச விசாரணை என்பவறறை தூசிபோல துடைத்து விடலாம் என்பதனை கணித்துவைத்தே அரசாங்கம் இந்தமுறை வடமா காண தேர்தல் இரதத்தில் உலா வந்து கொண்டிருந்தது.

வடமாகாண சபை என்ற சிங்கள தேசத்தின் ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஒரு நிர்வாக அலகு எந்த வகையிலும் தமிழர்களுக்கு எள்ளவும் நன்மையையும் சுபீட்சத்தையும் உரிமைதளையும் பெற்றுத் தந்துவிடும் என்று யாரும் கற்பனைகளில் மிதந்துவிடமுடியாது. ஆனாலும் எமக்கு முக்கியமான ஒன்றாக இத்தேர்தல் புகுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலால் எமக்கு ஆகப்போவது எதுவுமில்லை. ஆனால், இந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியடைய நேர்ந்திருந்தால், அது ஆக்கிரமிப்பாளனுக்கு பெருவாய்ப்பாக அமைந்துவிடும். மகிந்த அரசு கிடைக்கும் ஒரு தருணத்துக்காக காத்திருக்கின்றது. தமிழர்கள் சிங்கள தேசத்தின் ஆட்சியை ஏற்றுவிட்டார்கள் என்று காட்டுவதற்காக ராஜபக்ச அரசாங்கம் காத்திருக்கிறது.

விடுதலை என்பது முக்கியமானது. ஏனைய இனங்களைப்போல் நாமும் சுதந்திர்மாக வாழ நினைக்கும் அந்த உந்துதல்தான் விடுதலைப் போராட்டமாகிறது. அதற்காகப் பயணிக்கவேண்டும். நிச்சயமாக. ஆனால், பயணம் தொடர்வதற்கு முன்னர் நாம் எங்கே நிற்கிறோம் என்பதை புரிந்துகொள்ளுதல் மிகமிக அவசியம்.

நாம் இப்போது..., முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மகத்தான தியாகங்களுடனும் ஈகங்களுடனும் அர்ப்பணிப்புகளுடனும் அதி உச்சமான வீரத்துடனும் முன்னெடுக்கப்பட்டு வந்த விடுதலைப் போரராட்டம் இந்திய வல்லாதிக்கத்தின் துணையுடனும் சர்வதேசத்தின் துணையுடனும் சிதைக்கப்பட்டு மௌனமாக்கப்பட்ட பின்னர், சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக எந்தவொரு எதிர்ப்பையும் வெளிக்காட்டு வதற்கு வலுவற்ற ஒரு இனமாக நாம் இப்போது இருக்கின்றோம்.

சுற்றிலும் இராணுவ பிரசன்னம், எங்கும் சிங்கள புலனாய்வு வலைப் பின்னல் என்று எம்மக்களை சுற்றி இருக்கும்போது எதிர்ப்பு காட்டுவதற்கான முதற்குரல் எழும்புவதே நான்கு வருடங்களாகியும் இன்னும் சாத்தியமற்றதாகவே இருக்கிறது. இதுவே இன்று நாம் அனைவரும் நிற்கும் இடம்.

எமக்கான ஒரே அமைப்பாக எமக்காக, தமது உயிர்களை ஈகம் செய்து, வளர்ந்த, ஒரு பெரும் மக்கள் அமைப்பாக தழைக்கின்ற இயக்கம் மௌனமாகிய பின்னர் எங்கும் இருள் சூழ்ந்த பொழுதுகளே இன்றுவரை தொடர்கிறது. ஆனாலும் நாம் இருக்கின்ற நிலைமைகளுக்கேற்ப எமது பயணத்தை தொடந்தே ஆகவேண்டும்.

எம்மிடம் இப்போது உள்ளது சர்வதேச அரங்கு என்ற பாதை மட்டுமே. எம் மக்களின் மீதான இனப்படுகொல நடைபெறும் போது கண்மூடி பாவனை செய்து கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு துணைநின்றது இதே சர்வதேசம் தான். இன்று வரை சிறிலங்காவுடன் இராணுவ ஒத்திகைகளிலும், இராணுவ தளபாட விநியோகங்களிலும் கூடிக்களிப்பது இந்த சர்வதேசம் தான் என்பதும் எமக்குத் தெளிவாகத் தெரியும்.

ஆனாலும், வேறு ஏதேனும் தெரிவு இருக்கிறதா எம்முன். சர்வதேசமே இப்போது எமக்கான பாதைகளை வரையறுக்கிறது; வரிக்கிறது. ஆனால், எமக்கான பாதையாக இப்போதெல்லாம் சர்வதேசமே சில பாதைக் குறிப்புகளையும் கூட வழங்குகின்றது. பாதை இதுவென்று அதுவே வழிகாட்டவும் செய்கிறது. இப்போதைக்கு அதில் பயணம் செய்தேயாக வேண்டிய கட்டாயமே எமக்கு உள்ளது.

இந்த வடமாகாணசபைத் தேர்தலும், சர்வதேசத்திற்கு, நாம் சிங்கள தேசத்துடன் பலவந்தமாக பிணைக்கப்பட்டுள்ளோம். ஆனால், சிங்கள தேசத்தின் அரசியல் கட்சிகள் எத்னையும் ஏற்றுக் கொள்ளமாட்டோம். **அவர்கள் ஒவ்வொருவரினதும் கைகளிலும் தமிழின அழிப்பின் குருதிக் கறைகள் இருக்கின்றன, என்பதை வெளிக்காட்டுவதற்காக இந்தத் தேர்தலைப் பயன்படுத்தியுள்ளோம். மாகாணசபை என்பது ஒரு உக்கி, உழுத்துப்போன கொப்பு. விரைவில் முறிந்துவிடக் கூடியதும் கூட.**

ஆனாலும் எமது தாயகத்துக்காக ஒவ்வொரு களங்களிலும் தம்மால் முடிந்ததையும்விட அதற்கும் அதிகமாகவே, மானுடம் இதுவரை அறிந்திராத தியாகங்களை எல்லாம் புரிந்த தேசத்தின் புதல்வர்களின் அர்ப்பணம் என்ற பலம் எமது சிறகுகளாகட்டும். மரம் முறிந்தாலும் எழுந்து பறக்கும் பறவையாக நாமிருப்போம்.

-இணையம்-

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

# 17.09.2013-17.10.2013



## மிதுனம்

மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள்,
திருவாதிரை, புனர்பூசம்
1,2,3 ஆம் பாதங்கள்

**புதனை ராசிநாதனாகக் கொண்ட மிதுன இராசி அன்பர்களே!**

**தொழில் வளம் மேலோங்கும்!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, போதுமான அளவிற்குப் பொருளாதாரம் வந்து சேரும் விதத்திலும், புண்ணியங்களை தேடிக்கொள்ள ஆலயங்களுக்குச் செல்லும் வாய்ப்பை அமைத்துக்கொடுக்கும் விதத்திலும் கிரக நிலைகள் சாதகமாக உள்ளன. பொதுவாக 7,10 க்கு அதிபதியான குருபகவான் ஜென்ம இராசியில் உலாவரும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டே இருப்பர்.

மனோபயம் அதிகரிக்கும். உடலில் பெரிய நோய் இருப்பதுபோல் தோற்றமளிக்கும். ஆனால், மருத்துவரிடம் காட்டி ஆலோசனைகளைக் கேட்டால் எதுவும் இல்லை என்று சொல்வர். உங்கள் இராசிநாதன் புதன் உச்சம் பெற்றிருப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் மனநிம்மதிக் குறைவு இருக்கத்தான் செய்யும். என்ன இருந்தாலும் குரு பரிகாரம் கேது, இராகு வழிபாடுகளும் செய்வதன் மூலம் சில சங்கடங்களில் இருந்து விடுபட இயலும்.

மாதத் தொடக்கத்தில் சந்திரன் 8 இல் சஞ்சரிக்கின்றார். செவ்வாய் 2 இல் நீச்சம் பெறுகிறார். சந்திராஷ்டமத்தோடு மாதம் தொடங்குவதால் எதிர்பாராத சில விரயங்கள் ஏற்படலாம். அதேநேரத்தில் சந்திர மங்கல யோகத்தோடு மாதப்பிறப்பு அமைவதால் குடும்பத்தில் நீண்ட நாட்களாக நடைபெறாதிருந்த மணவிழா போன்ற மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாகும்.

சில சொத்துக்களை விற்க முன்வருவீர்கள். சொந்த பந்தங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டிருக்கலாம். நீச்ச செவ்வாயின் ஆதிக்கத்தால் எதிரிகளின் பலம் குறையும். இந்த நேரத்தில் விலகிச்சென்ற சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். சான்றோர்களின் சந்திப்பால் சகல வழிகளிலும் நன்மை காண்பீர்கள். தொலைதூரப் பயணங்கள் மற்றும் அடுத்த மாநிலங்களுக்குச் செல்ல முன்வருவீர்கள். தங்களுடைய சுய ஜாதகத்தை ஒரு முறை பரிசீலனை செய்து அதன்பிறகு முடிவெடுத்துக்கொள்வது நல்லது.

**பொன்னான புதனின் சஞ்சாரம்!**

செப்ரெம்பர் 22 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இராசிநாதன் 5 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் யோகம்தான். பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய தகவல்கள் வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். தாழ்வுமனப்பான்மையை நீக்கிக்கொண்டு தன்னிச்சையாகச் செயற்பட முன்வருவீர்கள். தாயின் உடல் நலம் சீராகும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புக்கள் சிறப்பாக செய்து கொடுப்பர்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

இக்காலம் ஒரு பொற்காலம் என்று கருதும் விதத்தில் அக்ரோபர் 3 ஆம் திகதி முதல் சுக்ரனின் சஞ்சாரம் அமைகிறது. சுக்ரபலம் கூடுதலாக இருக்கும் பொழுது தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு தொழிலில் வந்து கொண்டேயிருக்கும். 12 க்கு அதிபதி6 இல் சஞ்சரிக்கும் பொழுது பயணங்களும் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடியே கிடைத்து மகிழ்ச்சியை வழங்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. ஓரளவு ஆதாயம் கிடைக்கும் என்று நினைத்துச் செய்த காரியங்களில் உன்னத பலன் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள்.

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்!**

அக்டோபர் 8 ஆம் திகதி சிம்ம இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறது. இக்காலத்தில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டும். வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்க அங்காரக வழிபாடு அவசியம் தேவை. குறிப்பாக சகோதர வழியில் ஏற்பட்ட சமரச முயற்சி மீண்டும் சச்சரவை உருவாக்கலாம். சில இடங்களை வாங்கிப்போட்டு அதில் கட்டடமும் கட்டி வாடகைக்கு விட முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மகிழ்ச்சி காணும் சூழ்நிலை உண்டு. மாதக் கடைசியில் நல்ல மாற்றங்கள் வந்து சேரலாம்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருவை வழிபட்டு குதூகலத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

# சிவல்புரி சிங்காரம்



## கடகம்

புனர்பூசம் 4 ஆம் பாதங்கள்,
பூசம், ஆயில்யம்

**சந்திரனை இராசிநாதனாகக்கொண்ட கடக இராசி அன்பர்களே!**

**கடவுள் வழிபாடும் கவனமும் தேவை!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கம் முதல் செவ்வாய் பெயர்ச்சி வரை மகிழ்ச்சியைத் தக்க வைத்துக்கொள்வது அரிதாகவே உள்ளது. உங்கள் இராசிக்கு 5,10 க்கு அதிபதி செவ்வாய் நீச்சம் பெற்று அர்த்தாஷ்டமச்சனி என்று வர்ணிக்கப்படும் 4 ஆம் இடத்துச் சனியைப் பார்க்கிறார். இது அவ்வளவு நல்லதல்ல. சனி, செவ்வாய் பார்வைக் காலத்தில் தடைகளும் தன விரயங்களும் தானாகவே வந்து சேரும்.

போராட்டத்தை உருவாக்கும் இந்த கிரகப் பார்வை இருக்கும் 22 நாட்களும் எதிலும் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது.

# கடவுள் வழிபாடும் கவனமும் தேவை!

உற்றார், உறவினர்களிடம் மட்டுமல்ல ஊர் மக்களிடமும், உடன் இருப்பவர்களிடமும் யோசித்துப் பேசுவது நல்லது. பொருள் விரயம், பூமி விரயம், போற்றிக் கொண்டாடியவர்கள் விலகும் சூழ்நிலை அனைத்தும் உருவாகும். இந்த நேரத்தில் வசந்த காலம் உருவாக வேண்டுமானால் கோவில்களுக்குச் சென்று தெய்வங்களின் எதிரில் நின்று வழிபாடு செய்ய வேண்டும்.

தனாதிபதி சூரியன் 3 ஆம் இடத்தில் விரயாதிபதியுடன் இணைந்து செயற்படுவதால் உடன்பிறப்புகளின் வழியில் உங்களை அறியாமலேயே ஒரு விரயம் ஏற்படும். வழக்குகளில் சீர் திருத்தம் ஏற்படும். மாதக் கடைசியில் சிம்மச் செவ்வாயின் ஆதிக்கம் வரும்பொழுது செல்வ நிலை உயரும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். யோகாதிபதி, தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதைச் செய்ய நினைத்தீர்களோ, அதைச் செய்து முடிப்பீர்கள். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

என்ன இருந்தாலும் சுக ஸ்தானத்தில் சனியும் இராகுவும் இணைந்திருப்பதால் உழைப்பிற்கேற்ப பலன் கிடைப்பது அரிது. ஊர் மாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் போன்ற மாற்றங்களை மேற்கொள்ளலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். நாடு மாற்றங்கள் திருப்தி அளிக்காது. மற்றவர்களிடம் நம்பி ஒப்படைத்த பொறுப்புக்கள் மீண்டும் உங்களிடமே வந்து சேரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

மாதத்தொடக்கத்தில் உச்சம் பெற்று சஞ்சரித்து வந்த புதன் செப்டெம்பர் 22 ஆம் திகதி துலாம் இராசிக்கு செல்கிறார். இதன் விளைவாக என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் நல்ல விலைக்கு விற்கநேரிடும். இல்லத்திற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் வாங்க முன்வருவீர்கள். எதிர்பாராத மாற்றங்களும் திருப்புமுனைகளும் ஏற்படும் நேரமிது. மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல விழாக்களை முன்நின்று நடத்துவீர்கள்.

**விருச்சிக சுக்ரனின் ஆதிக்கம்!**

அக்டோபர் 3 ஆம் திகதி விருச்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். பிற்காலத்தில் குடும்பத்தில் குழப்பங்கள ஏற்பட்டு அகலும். கூடப்பிறந்தவர்களிம் அனுசரித்துச் செல்வது நல்லது. தொழிலில் சிறு, சிறு விரயங்கள் ஏற்படும் சூழ்நிலை உண்டு. பெண்வழிப் பிரச்சினைகள் தலைதூக்கும்.

பிள்ளைகளை உங்கள் கண்காணிப்பில் வைத்துக்கொள்வது நல்லது. புதிய ஒப்பந்தங்கள் வந்து அலைமோதினாலும் யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது. பணியாளர்களின் பிரச்சினை தலைதூக்கும்.

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்!**

புத்திர ஸ்தானத்திற்கும் தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதியான செவ்வா தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளர்ச்சி மேலோங்கும். கூட்டாளிகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். இடம், பூமி ஆகியவற்றின் பத்திரப் பதவுகளில் இருந்த தடைகள் அகலும். புது முயற்சிகளில் வெற்றி கிட்டும். இந்த நேரத்தில் பிள்ளைகள் வழியிலும் உதிரி வருமானங்கள் வந்து சேரும். கடந்த சில நாட்களாக கைகூடாத காரியங்கள் செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு ஒவ்வொன்றாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்குப் புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரும்.

இம்மாதம் அங்காரக வழிபாடும் சனீஸ்வர வழிபாடும் செய்து வருவதோடு காகத்திற்கும் சோறு வைப்பது நல்லது.

(தொடரும்)

# அமெரிக்கா- ஈரான் நாட்டு ஜனாதிபதிகள் 34 ஆண்டுகளுக்குப் பின் சந்திக்கவுள்ளனர்

(வோஷிங்டன்)

**அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரப்பானி ஆகிய இருநாட்டு ஜனாதிபதிகளும் கடந்த 34 ஆண்டுகளுக்குப் பின்னர் முதற்தடவையாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.**

இதனால் இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவு மலர வாய்ப்புள்ளதாக குறிப்பிடப் படுகிறது.

**அணு உலையால் சிக்கல்**

ஈரான் இரகசிய அணு உலை மூலம் ஆயுதம் தயாரிப்பதாக மேற்கத்தேய நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன. இதை மின்சார உற்பத்தி திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்துவதாக ஈரான் கூறியது. ஆனால் அதை ஏற்க அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் மறுக்கின்றன.

இதனால் ஈரான் மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டு அமுலில் இருக்கிறது. அங்கிருந்து கச்சா எண்ணெய் வாங்கவும் சீனா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

**புதிய ஜனாதிபதி நிலையில் மாற்றம்**



இந்நிலையில் ஈரான் நாட்டின் புதிய ஜனாதிபதிபதியாக ஹசன் ரப்பானி பதவி ஏற்ற பிண்பு அந்நாட்டின் நிலைப்பாட்டில் சற்று மாற்றம் உருவாகி வருகிறது. சமீபத்தில் ரப்பானி தொலைக்காட்சிக்கு பேட்டி அளிக்கையில்,

'எனது ஆட்சி காலத்தில் அணு ஆயுதங்கள் தயாரிக்கமாட்டோம். எந்த சூழ்நிலையிலும் அதற்கு அனுமதிக்க மாட்டேன்' என்று குறிப்பிட்டார்.

அத்துடன் அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளுடன் நல்லுறவை மேம்படுத்த விரும்புகிறேன் என்றும், பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கிறோம்' என்றும் குறிப்பிட்டார்.

இந்த ரப்பானியின் அறிவிப்பை அமெரிக்க வெளியுறவு மந்திரி ஜோன் கெர்ரி மற்றும் பிரானஸ் நாட்டு தலைவர்க[illegible] வரவேற்றனர்.

**ஒபாமா-ரப்பானி சந்திப்பு**

இந்நிலையில் ஐ.நா.வின் 68ஆவது பொதுச்சபை கூட்டம் அடுத்த வாரம் நியூயோர்க்கில் நடைபெறுகிறது.

இதில் பங்கேற்க ஈரான் ஜனாதிபதி செல்கிறார். அப்போது அவர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்து பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபற்றி வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜாய் கார்னே பதில் அளிக்கையில்,

'தற்போதைய திட்டத்தின்படி ஒபா மாவும், ஈரான் ஜனாதிபதியும் சந்திக்கும் அம்சம் இடம்பெறவில்லை என்றாலும் சந்திப்பு நடக்க அதிக வாய்ப்பு இருக்கிறது' என்றார். ஆகவே இரு தலைவர்களும் கண்டிப்பாக சந்திப்பார்கள் என்று கருதப்படுகிறது.

**பிரான்ஸ் ஜனாதிபதி சந்திப்பு**

இதேபோன்று ரப்பானியை சந்திக்க போவதாக பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோசிஸ் ஹோலண்டேவும் விருப்பம் தெரிவித்தார். இதுவும் கடந்த 2005ஆம் ஆண்டுக்கு பின் இருநாட்டு தலைவர்கள் சந்திப்பது முதல் தடவையாகும். (2)

# சிரியாவின் இரசாயன ஆயுதங்கள் குறித்து பன்னாட்டு ஆய்வாளர்களின் விசாரணை ஆரம்பம்

(டமாஸ்கஸ்)

சிரியா இரசாயன ஆயுதக்குவியல் பற்றிய தொடர்பில் பன்னாட்டு ஆய்வாளர்கள் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் ஆட்சிக்கு எதிராக பொதுமக்களின் போராட்டம் கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகிறது.

இந்நிலையில், கடந்த ஓகஸ்ட் மாதம் இரசாயன குண்டுகள் வீசப்பட்டு. ஆயிரத்து 429 பொதுமக்கள் மூச்சுத்திணறி உயிரிழந்தனர். அப்பகுதியில் இரசாயன குண்டுகள் வீசப்பட்டதை ஐ.நா. கண்காணிப்பாளர்களும் உறுதி செய்தனர்.

இதையடுத்து சிரியாவிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்தின. தங்களிடம் இரசாயன ஆயுதம் இல்லை என்று மறுத்துவந்த சிரியா ஜனாதிபதி தற்போது தங்களிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை ஒப்படைக்க ஒரு வருடம் ஆகும் என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், சர்வதேச இரசாயன ஆயுதத்தடுப்பு அமைப்பை சேர்ந்த ஆய்வாளர்கள் குழு சிரியாவிடம் உள்ள ஆயுதங்கள் பற்றிய விபரங்களை சேகரிக்க ஆரம்பித்துள்ளனர்.

சிரியாவில் 1000 தொன் இரசாயன ஆயுதங்கள் இருக்கும் என்று நம்பப்படுகிற நிலையில் மேலும் அதுபற்றிய விபரங்கள் ஆட்சியாளரிடமிருந்து பெறப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை சிரியாவில் தற்போது நிலவும் உள்நாட்டுப் போர் நாட்டை சீர் தலைத்து வருவதால், ஜெனீவா மாநாட்டில் போர் நிறுத்தம் அறிவிக்கப்படும் என்று சிரியா துணைப் பிரதமர் கத்ரி ஜமீல் தெரிவித்துள்ளார்.

லண்டனிலிருந்து வெளியாகும் கார்டியன் நாளிதழுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

"நண்ட காலமாக தடைப்பட்டுள்ள ஜெனீவா அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெறும் பட்சத்தில், அப்போது போர் நிறுத்தம் அறிவிக்கப்படும் என்று கூறினார். வெளி நாடுகளின் தலையீட்டை தவிர்த்து, ஜனநாயக முறையில் அரசியல் தீர்வு காண துணைபுரியும் வகையில் போர் நிறுத்தம் அறிவிக்கப்படும். இதுவே சிரியா அரசின் தற்போதைய நிலைப்பாடு" என்று அவர் மேலும் கூறினார்.(2)

# ஏமனில் தற்கொலை படை தாக்குதல்-56 பேர் பலி

ஏமன் நாட்டில் அல்கொய்தா தீவிரவாத அமைப்பினர் நடத்தியத் தற்கொலைப்படைத் தாக்குதல்களில் பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் உடபட 56 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் நாட்டில் ஷாப்வா மாகாணத்தில் உள்ள மாய்ஃபா பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர் முகாம் அமைத்திருந்தனர்.

அதன்மீது அரேபிய தீபகற்பத்தைச் சேர்ந்த அல்கொய்தா தீவிரவாத அமைப்பு நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது.

இதில் பொலிஸார் 8 பேர் உயிரிழந்தனர். அதேசமயம், அங்கிருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இரண்டு இராணுவ முகாம்கள் மீதும் அந்த அமைப்பினர் காரில் வெடிகுண்டுகளை நிரப்பிக் கொண்டு தற்கொலைப்படை தாக்குதல் நடத்தினர்.

அதில் இராணுவ வீரர்கள் 38 பேர் உயிரிழந்ததாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. அதேபோல், அல்-நுசைமா என்ற பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவ வீரர்கள் 10 பேர் உயிரிழந்ததாக. இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (2)




# சட்டவிரோதமாக குடியேறுபவர்கள் மீது இத்தாலி நடவடிக்கை எடுக்க வேண்டும்

ஐரோப்பியாவிற்குள் சட்டவிரோதமாக குடியேறுபவர்கள் மீது இத்தாலி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நா. அதிகாரி ஜாய் எசெய்லோ தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க மற்றும் ஆசியா நாடுகளில் இருந்து மத்தியத்தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள இத்தாலி வழியாக ஐரோப்பிய நாடுகளில் மக்கள் சட்டவிரோதமாக குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

ஆபிரிக்கா மற்றும் ஆசியா நாடுகளில் சண்டை மற்றும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பாக, சிரியா அகதிகள் என ஐரோப்பிய நாடுகளில் திருட்டுத்தனமாக குடியேறுபவர்களின் எண்ணிக்கை தற்சமயம் அதிகரித்து உள்ளது.

இதுகுறித்த பிரச்சினைகளை கண்காணித்து வரும் ஐ.நா. அதிகாரி ஜாய் எசெய்லோ கூறியதாவது,

சட்டவிரோதமாக இத்தாலி கடற்கரை வழியாக ஐரோப்பியாவுக்குள் கடத்திவரப் படுவர்கள் ஐரோப்பிய நாடுகளில் பாலியல் தொழிலை மேற்கொள்பவர்களாகவும், கட்டாய பணியாளர்களாகவும் ஆக்கப்படும் மோசமான நிலை உருவாகியுள்ளது.

இந்த மோசமான நிலையை பயன்படுத்தி கடத்தல்காரர்கள் மக்களை அடிமைகளாக ஆக்கிவருகின்றனர். இது மிகவும் கவலை அளிக்கக்கூடியதாக உள்ளது.

ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்படும் இப்பிரச்சினை குறித்து இத்தாலி அரசு உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (உ)



படம்: கரிசல்பட்டியும் காந்தி நகரும்

# சொந்தப் பணத்தில் 10 பேருக்கு வீடு கட்டிக்கொடுக்கின்றார் அஜித்



நடிகர் அஜித், தன் வீட்டில் வேலை பார்க்கும் 10 பேருக்கு தன் சொந்த செலவில் வீடு கட்டி கொடுக்கிறார். தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக இருப்பவர் அஜித். தான் மட்டுமல்லாது தன்னை சார்ந்து இருப்பவர்களும் நன்றாக இருக்க வேண்டும் என நினைப்பவர். அவ்வப்போது தன்னால் இயன்ற உதவிகளை பிறருக்கு செய்து வருகிறார்.

இந்நிலையில் நடிகர் அஜித், தன் வீட்டில் நீண்டகாலமாக வேலை செய்யும் 10 பேருக்கு வீடு கட்டி கொடுக்கிறார். இதற்காக மாமல்லபுரத்தை அடுத்துள்ள கேளம்பாக்கத்தில் தனியாக நிலம் வாங்கி, அதில் இந்த 10பேருக்கும் வீட்டு கட்டி கொடுக்கிறார். சமீபத்தில் இதற்கான நில பூஜை நடந்துள்ளது. சூட்டிங்கிற்காக அஜித், ஐதராபாத் சென்றதால் இந்த நில பூஜையில் பங்கேற்கவில்லை. ஆனால் அவருக்கு பதில் அவரது மனைவி ஷாலினி பங்கேற்றார்.

# 15 ஆண்டுகளின் பின் மருதநாயகம்

15 ஆண்டுகளின் பின் மீண்டும் மருதநாயகத்துக்கு உயிரூட்டும் முயற்சியில் ஈடுபடுகிறார் உலக நாயகன்.

கமலின் கனவுப் படம் தான் மருதநாயகம்.பதினெட்டாம் நூற்றாண்டில் வீழ்ந்த முகமது யூசுப் கான் என்கிற மருதநாயகம் என்ற வீரனைப் பற்றிய இந்த கதையை மிக பிரமாண்டமான வரலாற்றுப் படமாக எடுக்க நினைத்தார் கமல்.

தனது இலட்சியக்கனவை நனவாக்கும் விதமாக 1997ஆம் ஆண்டு இங்கிலாந்து ராணியை சென்னைக்கு அழைத்துவந்து மிகப் பெரிய ஆரம்ப விழா ஒன்றையும் நடத்தி அனைவரையும் பிரமிக்க வைத்தார்.

ஆனால் அதன்பின் பைனான்ஸ உட்பட பல்வேறு காரணங்களால் இந்தப்படத்தை எடுக்கும் திட்டத்தை தற்காலிகமாக கைவிட்டிருந்தார் கமல்.

ஆனால் இந்த வருட ஆரம்பத்தில் வெளியான விஸ்வரூபம் படத்தின் வெற்றியும், அந்தப்படம் இந்திய அளவில் ஏற்படுத்திய தாக்கமும் மிகப்பெரிது.

அதனால்தான் சூட்டோடு சூடாக விஸ்வரூபம் படத்தின் இரண்டாம் பாகத்தையும் எடுத்து முடித்து விட்டார் கமல்.

இப்போது இருக்கும் இந்த சூழ்நிலைதான் தூசிபடிந்து கிடக்கும் மருதநாயகம் படத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சரியான தருணம் என கமலின் நண்பர்கள் அவரிடம் கூறியுள்ளனர்.

அதனால்விஸ்வரூபம்-2 வேலைகளை முடித்துவிட்டு கமல் மருதநாயகமாக மாறுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

# சொந்தக் குரலில் பாட விரும்பும்....



பிரியா மணி, போதிய பட வாய்ப்புகள் இல்லாததால், தான், திரையுலகிற்கு அடி எடுத்து வைத்த, ஆரம்ப கால நாட்களை, அமைதியாக அசை போட்டு கொண்டிருக்கிறார். அவர் அளித்துள்ள ஒரு பேட்டியில், இப்போதெல்லாம், நடிகைகள், முதல் படத்திலேயே, ஆயிரம், இலட்சம் என, சம்பளம் வாங்குகின்றனர். ஆனால, நான் நடித்த முதல் படத்தில், எனக்கு, 500 ரூபாய் தான், சம்பளம். அதை பத்திரமாக வங்கியில் போட்டு விட்டேன். எனக்கு, ஒரு படத்திலாவது பின்னணி பாடி, நானே, அதற்கு நடிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது. இதுவரை அந்த ஆசை நிறைவேறவில்லை. அதேபோல், மேக்அப் இல்லாமல் ஒரு படத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசையும் உள்ளது என, கூறியுள்ளார்.

# சுருதிக்கு விருது

டுபாயில், சர்வதேச தென்னிந்திய திரைப்பட கலைஞர்களுக்கான சிறந்த விருது வழங்கும் விழா, சமீபத்தில் நடைபெற்றது. இதில், சிறந்த நடிகைக்கான விருது, ஸ்ருதி ஹாசனுக்கு வழங்கப்பட்டது. தென் மாநிலங்களின் பெருமை மிகு நடிகை என்ற விருது, அசினுக்கும், இளம் தலைமுறையினரை கவர்ந்த நடிகை என்ற விருது காஜல் அகர்வா லுக்கும் வழங்கப்பட்டது. சிறநத அறிமுக நடிகர் விருது, விக்ரம் பிரபு வுக்கும், சிறந்த அறிமுக நடிகை விருது, லட்சுமி மேனனுக கும் வழங் கப்பட்டது. தனக்கு கிடைத்த விருது குறித்து, ஸ்ருதி கூறுகையில், எனக்கு கிடைத்தது, மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. அதுவும், தலைசிறந்த நடிகையான, ஸ்ரீதேவி கையால் விருது வாங்கியது, மகிழ்ச்சியிலும், மகிழ்ச்சியளிக்கிறது என, பெருமிதம் தெரிவித்துள்ளார்.




# அபிநயாவின் நடிப்பில் அசந்துபோன அஜித்

ஆரம்பம் படத்தை தொடர்ந்து சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடித்து வரும் திரைப்படம் வீரம். இதில் அஜித்துக்கு ஜோடியாக தமன்னா நடிக்கிறார். இவர்களுடன் சந்தானம், விதார்த், அபிநயா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

படத்தை பொங்கலுக்கு வெளியிடுவதாக அறிவித்துள்ளார்கள். இந்தப் படத்தில் விதார்த்துக்கு ஜோடியாக நடிக்கிறாராம் அபிநயா. ஒருசில காட்சிகளில் மட்டுமே வந்தாலும், தன்னுடைய சிறப்பான நடிப்பால் அனைவரையும் கவர்ந்திருக்கிறார்.

அபிநயாவின் நடிப்பைப் பார்த்து அசந்துபோன அஜித், இயக்குநரை அழைத்து அபிநயா சம்பந்தப்பட்ட காட்சிகளை அதிகப்படுத்தச் சொல்லி இருக்கிறார் அஜித். மேலும், படப்பிடிப்பு தளத்தில் அபிநயாவுக்கு ஆதரவாக அவருடன் நீண்ட நேரத்தைச் செலவிடுகிறாராம் அஜித்.

# அக்கா, அண்ணி கதாபாத்திரங்கள் வேண்டாம்; லைலா




சினிமாவில் ஹீரோயினாக மட்டுமே நடிக்க வேண்டும். அக்கா, அண்ணி கதாபாத்திரங்களில் எல்லாம் நடிக்க மாட்டேன் என்று கூறியுள்ளார் முன்னாள் கதாநாயகியும் தற்போதைய தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளினியுமான லைலா.

பரபரப்பாக நடித்துக் கொண்டிருக்கும் போதே திருமணமாகி மும்பையில் செட்டில் ஆகிவிட்டார். இரண்டு குழந்தைகளுடன் ஜாலியாக பொழுது போக்கிக் கொண்டிருந்த லைலா இப்போது தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளினியாக மாறியிருக்கிறார். தமிழ் ரசிகர்கள் தன்னை இன்னமும் மறக்காமல் இருப்பது தனக்கு மகிழ்ச்சியளிப்பதாக கூறியுள்ளார் லைலா. மேற்கு மும்பையில் கணவர் குழந்தைகளுடன் வசித்து வரும் லைலா. குடும்பத் தலைவியாக இருப்பது சாதாரண விடயமில்லை என்கிறார்.

அக்கா, அண்ணி கதாபாத்திரங்களில் நடிக்க விருப்பமில்லை என்று கூறும் லைலா, குடும்பம், குழந்தைகளை கவனித்துக் கொண்டு வேலை பார்க்க சரியான இடம் தொலைக்காட்சிதான் என்கிறார்.

# வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆவலுடன் வாக்களித்த வாக்காளர்கள்

























# பாகிஸ்தான் சிறையிலிருந்து முல்லா பராதர் விடுதலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிறையில் இருந்து ஆப்கான் தீவிரவாதி முல்லா பராதர் விடுதலை செய்யப்பட்டார்.

ஆப்கானிஸ்தானில் இயங்கும் தலிபான் தீவிரவாதி இயக்கத்தின் தலைவர் முல்லா அப்துல் ஹானி பராதர் கடந்த 2010 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் நடந்த பொலிஸாரின் அதிரடி சோதனையில் இவர் சிக்கினார்.

அதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட அவர் பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த நிலையில் தலிபான் தீவிரவாதிகளுடன் சமாதான பேச்சு நடத்த வசதியாக இவரை விடுதலை செய்யும் படி பாகிஸ்தானிடம் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கோரிக்கை விடுத்தார்.

அதை ஏற்று நேற்று அவரை பாகிஸ்தான் அரசு விடுதலை செய்தது. ஆனால் அவர் எந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டார் என்ற தகவல் வெளியாகவில்லை.

கடந்த 1994 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாத இயக்கம் தோன்றியது. அதை உருவாக்கிய 4 பேரில் பராதரும் ஒருவர் ஆவார். (2)

# இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் பூர்வீக நாகதம் பிரான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய முன்றலில் தென்னிந்திய பின்னணி பாடகர்களான பத்மஸ்ரீகலைமாமணி கலாநிதி சீர்காழி சிவசிதம்பரம், இசைக்குயில் அனுராதா ஸ்ரீராம், சுப்பர் சிங்கர் புகழ் யாழினி ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து சமுத்திர தீர்த்த சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறும் இவ் வைபவத்தில் ஜி.சாயிதர்ஷனின் இசையில் தயாரிக்கப்பட்ட நாகமாலை இசைத்தட்டு வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மேற்படி இசை நிகழ்வில் நாகர்கோவில் ஈழத்து சௌந்தராஜன், வி.அருள்ஜோதி ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (5)

# தேர்தல் குறித்து வெளிநாடுகளின் முடிவில் திருப்தியடைய முடியாது

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

மாகாண சபைத் தேர்தல் முடிவடைய முன்னர் சில வெளிநாடுகள் தேர்தல் தொடர்பில் முழுமையான முடிபுகளுக்கு வந்துள்ளதாக இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் யாதாயினும் சம்பவங்கள் நடந்திருக்குமாயின் தயவு செய்து தேர்தலுக்கு பின்னர் அவை பற்றி கருத்துக்களை வெளியிடுங்கள்.

அத்தகைய சம்பவங்கள் இடம்பெற்று 48 மணி நேரத்திற்கு முன்பாக கருத்துக்களை வெளியிடுவது முழு தேர்தலுக்கும் தேர்தல் முடிபுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். அதேபோல் வெளிநாடுகள் முன்வைத்துள்ள தேர்தல் முடிபுகள் தொடர்பில் நாம் திருப்தியடைய முடியாது.

மேலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களை சகல வெளிநாடுகளும் புரிந்து கொள்ள வேண்டும். கண்ணிவெடி புதைக்கப்பட்ட மண்ணில் ஜனநாயகத்தை விதைக்க தயாராகும் சந்தர்ப்பத்தில் அதில் அறுவடையை பெற தயாராகி இருப்பவர்கள் வேறு தரப்பினரே என்றார். (2)

# மீத்தேன் வாயு இன்மையால் செவ்வாய் கிரகத்தில் வாழ முடியாது

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியாது எனக் கூறப்படுகின்றது. செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியுமா என்று ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாசா மையம் கியூரியா சிட்டி என்ற ஆய்வக விண்கலத்தை அனுப்பியது.

செவ்வாய் கிரகத்தை சென்றடைந்த கியூரியாசிட்டி தனது பணியைத் தொடங்கியது. இது செவ்வாய் கிரகத்தின் நில அமைப்பு சுற்றுச்சூழல் தட்ப வெப்பம் போன்றவற்றை ஆய்வு செய்து அதைப் புகைப்படம் எடுத்து பூமிக்கு அனுப்பி வருகின்றது. உயிரினங்கள் வாழ மீத்தேன் வாயு அவசியமாகும். அதில் தான் காபன் ஹைட்ரஜன் அணுக்கள் உள்ளன. இவையே உயிரினங்கள் வாழ்வதற்கான மூலக்கூறுகள் ஆகும்.

எனவே அங்குள்ள வான்வெளியில் மீத்தேன் வாயு உள்ளதா? என கியூரியாசிட்டி விண்கலம் ஆய்வு மேற்கொண்டது. ஆனால் மீத்தேன் வாயு இருப்பதை இதுவரை அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கடந்த ஆண்டு ஒக்டோபர் முதல் ஜுன் மாதம் வரை 6 தடவை மீத்தேன் குறித்த ஆய்வை கியூரியா சிட்டி மேற்கொண்டது. ஆனால் அவை இருப்பதற்கான அறிகுறிகள் எவையும் இல்லை.

இதற்கு முன்பு செவ்வாய் கிரக வான்வெளி காற்றில் 6 இல் ஒரு பங்கு மீத்தேன் வாயு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது கியூரியாசிட்டி ஆய்வில் 1.3 பங்கு கூட இல்லை என தெரிய வந்துள்ளது.

எனவே. செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வது சாத்தியமில்லை என்று கருத்து நிலவுகின்றது. (2)

# மாத்தளை வைத்தியசாலை எலும்புக்கூடு தொடர்பில் தகவல் தருமாறு கோரிக்கை

(கொழும்பு)

மாத்தளை பொது வைத்தியசாலையில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவினர் ஆரம்பித்துள்ளதால் இது பற்றிய தகவல்கள் தெரிந்தோர் இரகசிய பொலிஸாருடன் ஒத்துழைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

மாத்தளைப் பொது வைத்தியசாலையில் அகழ்வுப் பணிகளின் போது மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. இவை தொடர்பான அறிக்கைகள் மாத்தளைப் பொலிஸாரினால் மேல் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து நீதிமன்றம் வழக்கு என்.டீ. 1810/12 இன் கீழ் பிறப்பித்த கட்டளைக்கு அமைய குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (2)


LEYDEN CONSTRUCTIONS CONSORTIUM (Pvt) Ltd.

(A Member Of The 'LEYDEN BANIANS' Group)






யாழ் மண்ணில் நம்பிக்கையான உறுதியான பாரம்பரிய கட்டட நிபுனத்துவம் மிக்க பொறியியலாளர்களின் மேற்பார்வையில் உங்கள் வீடுகள், கடைகள், கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும்.

We Specialized in......

01) Accomplish jobs always within the time frame.
02) Full time supervision and security facilities for every work sites.
03) Skilled and experience working teams.
04) Sophisticated machineries for technical jobs.
05) Heavy machineries for heavy construction.
06) Geotechnical Engineering facilities for foundation work.
07) Structural Engineering designs to reduce cost and strengthen the building.
08) Pantry cupboards for modern kitchen.
09) Hot & Cold water plumbing and dry bathrooms.
10) Television, Telephone, Network, and ring circuit Electrical wiring.
11) Experience tillers and painters to give hotel finish.
12) All bill payments are done on measure and pay basis.
13) Loans facilities shall be arranged with banks at your convenience.
14) AutoCAD planning & printing facilities available.

(3998)

For Contact :-
472, Main Street, Chundikkuli, Jaffna.
T. Phone :- 077 3151654, 0777 320799
E mai :- ssreeganathas@yahoo.co.in

SAVE 35,000 in Diploma

ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரே ஒரு ACCA Gold Approved அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

[ அதி சிறந்த கற்பித்தலுக்கான அங்கீகாரம் ACCA U.K]

K-AIMS

புதிய பிரிவுகள் 24th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104 021 221 9422
COLOMBO 0772 555 814

(சி/4760)

மிகக்குறைந்த விமானக் கட்டணங்கள்



மாதாந்த கொடுப்பனவு முறை

| | |
|---|---|
| கொழும்பு - சென்னை | 1470/=Rtn |
| கொழும்பு - திருச்சி | 1870/=Rtn |
| கொழும்பு - சிங்கப்பூர் | 3050/=Rtn |
| கொழும்பு - மலேசியா | 3350/=Rtn |
| கொழும்பு - மதுரை - | 1640/=Rtn |
| கொழும்பு - லண்டன் | 4550/=Rtn |
| கொழும்பு - பிரான்ஸ் | 9380/=Rtn |
| கொழும்பு - டோகா | 2850/=own |
| கொழும்பு - சுவிஸ் | 8900/=Rtn |



HNB

Special Offer for Credit Card holders!

NATION POPULAR TRAVELS & TOURS

www.nationtravels.com (சி/4773)

#128, Brown Road, Jaffna 0214920920

# தேர்தல் கடமையிலிருந்த வேளை கண்காணிப்பாளரின் வீடு தீக்கிரை

(மல்லாவி)

மாந்தை கிழக்கில் அமைந்துள்ள வன்னி விளாங்குளம் கிராமத்தின் முதலாம் வீதியில் உள்ள அடைக்கப்பன் பூபாலன் என்பவரது வீடு இனந்தெரியாதோரால் நேற்று நண்பகல் தீ மூட்டி முற்றாக எரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவது, குறித்த வீட்டு உரிமையாளரும் அவரது மனைவியும் மாந்தை கிழக்கு பகுதியில் தேர்தல் கண்காணிப்புக்காக சென்றிருந்தபோதே அவரது வீட்டை இனந்தெரியாத நபர்கள் தீ மூட்டி எரித்துள்ளனர்.

இதன் போது அவரது வீட்டு உடைமைகள் உட்பட முக்கிய ஆவணங்களும் பிள்ளைகளது பாடசாலை உபகரணங்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலரும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பவ்ரல் தேர்தல் கண் காணிப்பு குழுவினரும் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை அவதானித்து தகவல்களை திரட்டிச் சென்றுள்ளனர். (ம-15)

## வாக்குச் சாவடியில் வெடித்தது துப்பாக்கி

### ஒருவர் காயம்

(குருமன்காடு)

நேற்றைய வடமாகாண சபை தேர்தலின் போது வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில் காவல் கடமையிலிருந்த பொலிஸாரின் துப்பாக்கியொன்று தவறுதலாக வெடித்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கனகராயன் குளம் சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில் பாதுகாப்பு கடமையிலிருந்த பொலிஸாரின் துப்பாக்கியொன்றே தவறுதலாக வெடித்துள்ளது. அங்கு வாக்களிப் பதற்கு வருகைதந்திருந்த 24 வயதான நா.தவராசா என்பவரே காயமடைந்துள்ளார்.

துப்பாக்கியின் சன்னம் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில்பட்டு தெறித்தே அவரது காலில் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-250-266)

## வாக்களித்த இருவர் கைதாகி விடுதலை

(குருமன்காடு)

மன்னாரில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்துவிட்டு வெளியில் வந்து நண்பர்களுடன் உரையாடிகொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட இருவர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில் வாக்களித்து விட்டு வெளியில் வந்து நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போதே இவ்விருவரும் பொலிஸாரினால் கைது செயயப்பட்டனர்.

இவர்கள் இருவரும் பிரசாரத்தில் ஈடுபட்டதான சந்தேகத்திலேயே கைது செய்யப்பட்டனரென மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (ம-250)

## புதுக்குடியிருப்பு பொது நூலகத்தை புனரமைத்து உதவுங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பொதுநூலகம் புனரமைக்கப்படாதுள்ளதுடன் அதேவளாகத்தில் தற்காலிகமாக இயங்கும் நூலகம் பல வளப்பற்றாக்குறைகளுடன் இயங்குவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நிரந்தர காணியில் அமைந்துள்ள இக் கட்டடம் புனரமைப்பு செய்யப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர்.



இப்பொதுநூலகத்தை கோம்பாவில், மன்னா கண்டல், இரணைப்பாலை, சிவநகர், புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, மந்துவில், ஆனந்தபுரம், வள்ளிபுனம், தேவிபுரம், மல்லிகைத்தீவு ஆகிய 11 கிராமங்களை சேர்ந்த 133 கிராமங்களில் வாழும் 7 ஆயிரத்து 36 குடும்பங்களைச் சேர்ந்தோர் பயன்படுத்துகின்றனர்.

புனரமைப்பு செய்யப்படாத இப் பொது நூலகத்திற்கு பதிலாக அதேவளாகத்தில் இயங்கும் சிறிய நூலக கட்டடத்திற்கு மின் வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை. இதனால் மின்சாரத்தால் செயற்படும் அனைத்து வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

குடிநீர்வசதி, மலசல கூடவசதி இன்மையால் பெரும் சிரமங்களை நூலகப் பாவனையாளர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இங்கு குறைந்தளவு நூல்களே இருப்பில் உள்ளதுடன் நுகர்வோருக்கான இடப்பற்றாக் குறையும் நிலவுகின்றது.

எனவே துறைசார்ந்த அதிகாரிகள் நூலகத்தை புன்ரமைத்து இந் நூலகம் அனைத்து வளங்களுடனும் செயற்படுவதற்கு ஆவன செய்து தரவேண்டுமென அப்ப குதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)




## அடையாள அட்டை இன்மையால் அவதிப்பட்ட வாக்காளர்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மக்கள் மற்றும் துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் சில மக்கள் நலன்புரி முகாம்களில் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளை வாக்களிப்பதற்கு கொண்டு சென்று வாக்களிப்பதற்கு அனுமதி கிடைக்காமையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதைக்காண முடிந்தது.

தேர்தலுக்காக கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலரின் உறுதிப்படுத்தலுடன் தற்காலிக அடையாள அட்டை வழங்கப்பட்ட போதிலும் அதற்கு விண்ணப்பிக்காமையாலேயே இவ் அவல நிலை ஏற்பட்டுள்ளது

முல்லை, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் இம்முறை மக்கள் வாக்களிப்பு வீதம் கடந்த காலங்களை விட அதிகரித்து காணப்பட்டுள்ளது. (ம-15)

## சுயதொழில் உதவிகள் வழங்கப்படவுள்ளன


(சிவநகர்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடனும் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள வறிய குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தலா 40ஆயிரம் ரூபா வீதம் சுய தொழில் உதவிகள்வழங்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ்பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கே இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளது.(ம-254)

## புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் அசௌகரியம்



(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு -ஒட்டுசுட்டான் வீதி 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது பெரிதும் பழுதடைந்த நிலையிலுள்ளது.

ஆதலால் இவ் வீதியூடாக பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

21.1கிலோ மீற்றர் நீளமான இவ்வீதியூடாக புதுக்குடியிருப்பில் இருந்து ஒட்டுசுட்டான் நெடுங்கேணிக்கும் அங்கிருந்து வவுனியா ஊடாக மாங்குளத்திற்கும் மக்கள் பயணிப்பதோடு, குறிப்பாக ஒட்டுசுட்டான், பேராறு, கற்சிலைமடு, வித்தியாபுரம், புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு ஆகிய கிராம மக்கள் அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

இவ் வீதியிலே கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, பேராறு தமிழ் வித்தியாலயம் ஆகியவை அமைந்துள்ளன. இவற்றில் கல்வி பயிலும் 600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ்வீதியூடாகவே பயணிப்பதோடு, 100 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களையும் எடுத்துச் செல்கின்றனர்.

எனவே இவர்கள் அனைவரதும் நலன்கருதி இவ்வீதியைப் புனரமைத்து தரவேண்டுமென பயணிகளும் அப்பகுதிமக்களும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## செயலமர்வு

(பூந்தோட்டம்)

வழிகாட்டல் ஆலோசனை மற்றும் உளசமூகச் செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மணிவரை வடமாகாண கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள் ளது.

வடமாகாண மட்ட சர்வதேச உள நல விழா தொடர்பான கலந்துரையாடலை உள்ளடக்கிய இச் செயலமர்வில் வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார், மடு, முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி, தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடுகின்ற அலுவலர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார். (ம-266)

## தமிழ் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டி

(குருமன்காடு)

ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி இலங்கை வாழ் எழுத்தாளர்களை முன்னிலைப்படுத்தி சிறுகதை போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இலங்கையில் வாழ்கின்ற எழுத்தாளர்களே பங்குபற்ற முடியும். வயதெல்லைகள் கிடையாது. ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே முழுப் பொறுப்புமாவர். சிறுகதை சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும். முன்னதாக ஊடகங்களில் வெளிவந்திருக்கக் கூடாது. சிறுகதைகள் ஏ-4 தாள்களில் கணனியில் பதிவு செய்யப்பட்டு 5,6 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். சிறுகதைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் mr. v.sivarasa, amwildhovel, 47 249,duisburg, germany. p.puththisikamani,mescheder str.19, 59846 sundern,germany என்ற முகவரிக்கோ அல்லது v.sivarajah @ arcor.de அல்லது ponmani @ hotmail.de மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம். இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று சிறுகதைகளுக்கு பணப்பரிசில், சான்றிதழ் வழங்கப்படும். முதலாவது பரிசாக 25 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். மேலும் பன்னிரண்டு சிறுகதைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளிக் கொணர்ந்து அவர்களை கௌரவிக்கும் முகமாக இச்சிறுகதை போட்டி நடைபெறவுள்ளது. தாயக வாழ்வியலை உலக மக்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கோடு இப்போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

தவறு செய்ததைப் பற்றி கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யாதிருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும். –ஆலன் தார்ன்ஹில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கில் உணர்வுபூர்வமான வாக்களிப்பு மக்களின் அபிலாஷைகளை மதியுங்கள்!

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்தாயிற்று. இதை எழுதும்வரை தேர்தல் முடிவுகள் கிடைக்கப்பெறவில்லையாயினும் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் கணிசமான அளவில் மக்கள் வாக்களித்துள்ளனர் என்ற செய்தி ஆத்ம திருப்தியைத் தந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் 66 சதவீதமானவர்கள் வாக்களித்துள்ளனர் என்பது சாதாரணமான விடயமல்ல.

இலங்கையில் 66 சதவீத வாக்களிப்பு என்பது நாட்டில் கடந்த கால தேர்தல் வாக்களிப்புகளில் உயர்வான பதிவு என்பது மறுக்கமுடியாத உண்மை.

எனவே வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மக்கள் உணர்வுபூர்வமாக வாக்களித்துள்ளனர் என்பதும் அந்த வாக்களிப்பின் முடிவுகளை வேட்பாளர்கள் மரியாதையோடு ஏற்றுக் கொள்வதும் அவசியமாகும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் 66 சதவீதமான மக்கள் வாக்களித்தனர் என்ற பெருமைக்குரிய செய்திக்கு அப்பால், தேர்தலில் ஒரு சில அசம்பாவிதங்களைத் தவிர மற்றும்படி வாக்களிப்பு முறையாக–ஒழுங்காக நடைபெற்றது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் ஒழுங்காக – செம்மையாக –நீதியாக நடைபெறுவதில் தேர்தல் திணைக்களம், தேர்தல் பணியில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள், பொலிஸார், தேர்தல் கண்காணிப்பாளர்கள் அதிலும் குறிப்பாக வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள், வாக்காளர்கள், வேட்பாளர்கள் எனப் பலதரப்பட்டவர்களின் கடுமையான பங்களிப்பு இருந்ததை கௌரவத்தோடு இங்கு கூறிக்கொள்வதும், இதற்காக இவர்களைப் பாராட்டுவதும் அவசியம்.

அதேநேரம் வாக்குகளை எண்ணுவது, தேர்தல் முடிவுகளை, அறிவிப்பது என்ற மிக முக்கிய பணிகளும் ஒழுங்காக நடந்தேற வேண்டும் என்பதும் நம் வேணவா.

இவற்றின் மத்தியில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தென்பகுதியைச் சேர்ந்த இனவாத அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

அதில் பொது பல சேனவும் அந்த அமைப்பில் இருக்கக்கூடிய புத்த பிக்குகளும் வடக்குத் தேர்தலுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில், வடக்கில் நடந்துமுடிந்த தேர்தலில் மக்களின் பங்கேற்பை அறிந்த பின்பேனும் இனவாதிகள் பேரினவாத விசத்தைக் கக்காமல் இந்த நாட்டின் இன ஒற்றுமை பற்றி– சிறுபான்மை இனங்களுக்கு மறுக்கப்பட்டுள்ள உரிமைகள் தொடர்பில் நேரான சிந்தனைக்கு உட்பட வேண்டும். இச் சிந்தனை ஆளும் தரப்பிற்கும் மிகவும் அவசியமாகும்.

இதையே வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் உயர்வான எண்ணிக்கை வலியுறுத்தி நிற்கின்றது.

தொடர்ந்து தேர்தல் முடிவுகளில் இருந்து அரசும் அரசியல் கட்சிகளும் கற்றுக் கொள்ள வேண்டியவற்றைப் பார்க்கலாம்.

# கண்காணிப்பாளர் தாக்கப்பட்டார்

கிளிநொச்சியில் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த தங்களுடைய கண்காணிப்பாளர்கள் இருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கபே அமைப்பு அறிவித்துள்ளது.

அரசியல் கட்சியொன்றை சேர்ந்தவர்களே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அவ்வமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

குறித்த கட்சியினர் வாக்காளர்களுக்கு உணவுக் பொட்டலங்களை வழங்கிக் கொண்டிருந்தபோது, அது தொடர்பாக கண்காணிப்பில் ஈடுபட்ட கண்காணிப்பாளர்களே தாக்கப்பட்டுள்ளனர்.

வாக்களர்களுக்கு உணவோ, பரிசுப் பொருட்களோ வழங்குவது தேர்தல் விதிமுறை மீறலாகும் என கபே தெரிவித்துள்ளது. (எ-11)

# தேர்தலை புறக்கணித்த வாக்காளர்கள்

வாக்காளர் அட்டைகளை கிழித்துவீசிய வாக்காளர்கள் தேர்தலை புறக்கணித்த சம்பவமொன்று புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

புத்தளம், ஆனமடுவ பால்கம மற்றும் கவவேலந்த ஆகிய 2 கிராமங்களைச்சேர்ந்தவர்களே தங்களுடைய வாக்காளர் அட்டைகளை கிழித்தெறிந்து வாக்களிப்பை புறக்கணித்தனர்.

இந்த இரு கிராமங்களையும் சேர்ந்தவர்களுக்கு பாலகம சனசமூக நிலையத்திலேயே கடந்த பலவருடங்களாக வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. இம்முறை அந்த வாக்குச்சாவடி கிராமங்களிலிருந்து 2 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள ஆனமடுவ சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அந்த கிராமங்களின் மக்கள் வாக்களிப்பை புறக்கணித்துள்ளனர்.

அந்த கிராமங்களைச் சேர்ந்த சுமார் 600 வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளை நேற்றுச் சனிக்கிழமை அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# சந்திரிகா–விகாராதிபதி பேச்சு அரசியலில் பெரும் பரபரப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கோட்டே நாகவிகாரையின் விகாராதிபதி மாதுளுவாவே சோபித தேரரை கடந்த வாரம் சந்தித்து இரகசியமான கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதியின் இந்தச் சந்திப்பு அரசியல் துறையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

இந்த சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைமைகள் பற்றி இருவரும் கலந்துரையாடியுள்ளதாக தெரியவருகிறது.

இதன்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சந்திரிகா குமாரதுங்க,

அதனை ஒழிக்க வேண்டும் என்று குரல் கொடுத்து வரும் சோபித தேரரின் நீதியான சமூகத்திற்கான மக்கள் அமைப்பு முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் அமைச்சர் மேர்வின் சில்வா, மாதுளுவாவே சோபித தேரரை சந்திக்க நாக விகாரக்கு சென்றிருந்தமை அரசியல் துறையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.


இதனையடுத்து மேர்வின் சில்வாவை தொடர்பு கொண்டிருந்த ஜனாதிபதி, மாதுளுவாவே சோபித தேரருடன் என்ன பேசப்பட்டது என வினவியதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

நீதியான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிப்பதற்காக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த போவதாக கூறிவருகின்றார்.

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடைபெறலாம் என தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதிக்கும் தேரருக்கும் இடையில் இந்த சந்திப்பு நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எல்லாரும் வாழியடா



வீண்பா னையெல்லாம் விட்டிடடா– தம்பி
வேத நெறியிலே தொட்டிடடா
காண்பான் காட்சியுமில்லையடா– தம்பி
காணப் படும்பொருளி ல்லையடா

வாழி குருநாதன் வாழியடா– தம்பி
வாய்மை யடியாரும் வாழியடா
கேளிருஞ் சுற்றமும் வாழியடா–தம்பி
கேட்டவ ரெல்லாரும் வாழியடா

# அனைவரும் வாழ்வுபெற பரந்த மனதோடு பலரையும் உற்று நோக்குங்கள்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இன்று நமக்குத்தரப்படும் பைபிள் பகுதியில் இயேசு மூன்று அறிவுரைகளை நமக்குத் தருகிறார். முதலாவது நேர்மையற்ற செல்வத்தைக் கொண்டு நண்பர்களைத் தேடிக் கொள்ளுங்கள். நம்மிடத்தில் உள்ள திறமைகள், ஆற்றல்கள், குறிபபாக பணம் இவற்றைக் கொணடு நல்ல நணபர்களை, குறிப்பாக மறுவுலக வாழ்வுக்கான நண்பர்களைத் தேடிக் கொள்ள வேண்டும். எனவே, செல்வம் சேர்த்து வைப்பதற்கல்ல. மாறாக, இறைவனுக்காகப் பயன்படுத்துவதற்காக. அதை மனதில் கொள்வோம்.

இரண்டாவது நேர்மையற்ற செல்வத்தைக் கையாள்வதிலேயே நம்பத்தகாதவராய் இருந்தால், உண்மைச் செல்வத்தை யார் ஒப்படைப்பார்?

## பரமபிதா காட்டிய பாதை


எனவே, நிதியை, குறிப்பாக பொது நிதியைக் கையாள்வதில் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் இருக்க வேண்டும். நிதியை நேர்மையோடு கையாள்பவர் ஏனைய அனைத்தையும் கையாள்வதில் நம்பிக்கைக்குரியவராய் இருப்பார்.

மூன்றாவது ஒரு வேலையாள் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக் கணிப்பார். "நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது." என எடுத்துக்காட்டுகின்றார். கடவுளையும், காசையும் நாம் வழிபட முடியாது. செல்வத்தின்மீது அதிக பற்றுக்கொள்வது சிலைவழிபாட்டுக்கு ஒப்பானது. எனவே, செல்வத்தைக் கடவுளுக்கு இணையாக்காமல் வாழவோம்.

இயேசு இன்று செல்வத்திற்குப் பணிவிடை செய்வது குறித்தும் பேசியிருக்கிறார். "கடவுளுக்கும், செல்வத்திற்கும் பணிவிடை செய்யமுடியாது." என்று இயேசு கூறும் வார்த்தைகளைக் கேட்கும் இன்றைய தலைவர்களும் தொணடர்களும் ஏளனமாய்ச் சிரித்துக் கொள்வார்கள். "கடவுளுக்கும், செல்வத்திற்கும் பணிவிடை செய்யமுடியாது" என்று யார் சொன்னது. நாங்கள் கடவுளுக்கும் செல்வத்திற்கும் பணிவிடை செய்கிறோம், ஏனெனில் எங்கள் கடவுளே செல்வம்தான் என்று சொல்கிறார்கள் இவர்கள்.

இங்கு கடவுளுக்கு இணையாக உயி ரற்ற ஒரு பொருளை இயேசு முன் வைக்கிறார். இது சாத்தியமாகுமா? சாத்தியமாகியுள்ளது, சரித்திரமாகியுள்ளது. கடவுளுக்குப் பதில் செல்வத்தைக் கடவுளாக்கி, வழிபடும், பணிவிடை செய்யும் பலரை நாம் இன்று பார்க்கின்றோம். இயேசுவின் இந்தக் கூற்று செல்வத்திற்கு எதிராக, செல்வத்தைக் கண்டனம் செய்து பேசப்பட்டதாகத் தோன்றலாம். செல்வம் சேர்ப்பது, செல்வத்தைப் பகிர்வது, செலவிடுவது இவைகளை இயேசு குறை கூறவில்லை. செல்வத்திற்குப் பணிவிடை செய்வதையே அவர் தவறு என்று எச்சரிக்கிறார். செல்வம் என்ற உயிரற்ற பொருள் நமக்குப் பணிவிடை செய்யவேண்டும். இதுதான் இயற்கை. அதற்குப் பதிலாக, உயிரற்ற செல்வத்திற்கு உயிரும், அறிவும் கொண்ட நாம் பணிவிடை செய்வது தவறு என்று இயேசு எச்சரிக்கிறார்.

"எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது" என இன்று இயேசு கூறும் இவ்வார்த்தைகளை எம் இன்றைய அரசியலுடன் கொஞ்சம் சிந்திக்க தூண்டுகிறது. எம் பகுதி இன்று தேர்தல் முடிவுகளை சந்தித்து எமமை வழிநடத்த ஒரு தலைவரை எதிர்பார்த்திருப்பதால, இவ்வரிகளை ஓரளவு சிந்திப்பது பயனளிக்கும் இயேசு இவ வார்த்தைகளைச் சொன்ன போது, உணமையான தலைவன, உண்மையான பணியாளரைப் பற்றி அவர் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும்.



நல்ல பண்புகள் உள்ள ஒருவரைத்தலைவராக தெரிவு செய்து ஏற்றுக் கொள்ளும் பணியாளர், அத்தலைவன் மீது உள்ள மதிப்பினால், அன்பினால் அவருக்குப் பணிவிடை செய்வார். தலைவன் தரும் பணம் அல்லது பிற பயன்கள் இவைகளுக்காகச் செய்யப்படும் பணிவிடை அல்ல தொண்டரின் பணி. இவைகளை எல்லாம் தாண்டி, பணியாளரின் பணிவிடை அமைந்திருக்கும். "எவரும் இரு தலைவர்களுககுப் பணிவிடை செய்ய முடியாது" என்ற இயேசுவின் கூற்று, இன்றுவரை நாம் சந்தித்த நமது அரசியல் தலைவர்கள், தொண்டர்களுக்குப் பொருந்தாது. இந்தத தலைவர்கள், தொண்டர்கள் அனைவரும் வேறொரு தெய்வத்திற்குப் பணியாளர்கள். பணம் என்ற தெய்வத்திற்கு இவர்கள் அனைவரும் பணிவிடை செய்கிறார்கள். செல்வத்தைக் கொண்டு பிறரன்புச் செயல்புரிகின்ற தலைவர்களை மக்கள் என்றும் நிலையாக தம் உள்ள உறைவிடங்களில் உறுதியாக வைத்திருப்பார்கள் என்பது வரலாறு. எனவே தலைவர்களே, அனைவரும் வாழ்வுபெற பரந்த மனதோடு, பலரையும் உற்று நோக்குங்கள்.

# சம்பியன்ஸ் லீக் தகுதிச் சுற்றில் வீழ்ந்தது கந்துரதா



சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியின் தகுதிச் சுற்றில் கந்துரதா அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஃபைசலாபாத் அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று ஆறுதல் தேடிக்கொண்டது.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஃபைசலாபாத் உல்வ்ஸ் மற்றும் கந்துரதா மரூன்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கந்துரதா அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

வழக்கம்போல் ஃபைசலாபாத் அணி வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அந்த அணி 56 ஓட்டங்களில் 4 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. ஒரு பக்கம் விக்கெட்டுகள் சரிந்தாலும், மறுபுறம் அந்த அணியின் தலைவர் மிஸ்பா-உல்-ஹக் மட்டும் சரவெடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அந்த அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்களை பெற்றது. மிஸ்பா-உல்-ஹக் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 60 பந்துகளில் 93 ஓட்டங்களை எடுத்தார். இதில் 6 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கும். கந்துரதா அணி தரப்பில் தில்ஹாரா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

அடுத்து களமிறங்கிய கந்துரதா 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 136 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. இதையடுத்து, ஃபைசலாபாத் அணி 10ஓட்டங்கள் வித்தியாசத்தில் கந்துரதா அணியை வென்று ஆறுதலடைந்தது.



# கிறிஸ்டியானோவை விட மெஸ்ஸி சிறந்த வீரர்

## - ரொனால்டோ புகழாரம்

கிறிஸ்டியானோ ரொனால்டோவை விட மெஸ்ஸி சிறந்த ஆட்டக்காரர் என பிரேசில் நாட்டு முன்னாள் காற்பந்து ஆட்டக்காரர் ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறுகையில்,

ஆர்ஜெண்டினா அணி பல சகலதுறை ஆட்டக்காரர்களைக் கொண்டுள்ளது. அதில் சிறந்த வீரரை தேர்வு செய்வது என்பது மிகவும் கடினமாகவுள்ள நிலையிலும் நான் மெஸ்ஸியைத்தான் தேர்வு செய்வேன். அவர் என்னைப் போல் விளையாடுகிறார. பல முக்கிய தருணங்களில் அணிக்காக கோல் அடித்தும் வருகிறார்.

எனக்குப் போட்டியாக ஜிடேன், ரிவால்டோ, ரொனால்டினோ, ஓவன் போன்ற பல வீரர்கள் ஒவ்வொரு அணியிலும் இருந்தனர்.

அதுபோல், இப்போது மெஸ்ஸி மற்றும் போர்த்துகீசிய வீரர் கிறிஸ்டியானோ திகழ்கின்றனர். இருவரின் ஆட்டமும் வேறுபட்டது. அதில் மெஸ்ஸியின் ஆட்டம் சிறந்ததாக உள்ளது.

இப்போது மேட்ரிட் அணிக்காக விளையாடி வரும் கிறிஸ்டியானோ அதிக கோல்களை அடிக்க கற்று வருகிறார்" என்று ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

## சம்பியன்ஸ் லீக் போட்டி - 2013

| திகதி | மோதும் அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| செப்.21 | ராஜஸ்தான் ராயல்ஸ்-மும்பை இந்தியன்ஸ் | ஜெய்ப்பூர் | இரவு 8 மணி |
| செப்.22 | பிரிஸ்பேன் ஹீட்-டிரினிடாட் டொபாக்கோ | ராஞ்சி | மாலை 4 மணி |
| ,, | சென்னை சூப்பர் கிங்ஸ்-டைட்டன்ஸ் | ராஞ்சி | இரவு 8 மணி |
| செப்.23 | லயன்ஸ்-பெர்த் ஸ்கார்சர்ஸ் | ஆமதாபாத் | மாலை 4 மணி |
| ,, | மும்பை இந்தியன்ஸ்-ஒட்டாகோ | ஆமதாபாத் | இரவு 8 மணி |
| செப்.24 | பிரிஸ்பேன் ஹீட்-டைட்டன்ஸ் | மொகாலி | மாலை 4 மணி |
| ,, | டிரினிடாட் டொபாக்கோ -ஐதராபாத் சன்ரைசர்ஸ் | மொகாலி | இரவு 8 மணி |
| செப்.25 | பெர்த் ஸ்கார்சர்ஸ்-ஒட்டாகோ | ஜெய்ப்பூர் | மாலை 4 மணி |
| ,, | லயன்ஸ்-ராஜஸ்தான் ராயல்ஸ் | ஜெய்ப்பூர் | இரவு 8 மணி |
| செப்.26 | சென்னை சூப்பர் கிங்ஸ்-ஐதராபாத் சன் ரைசர்ஸ் | ராஞ்சி | இரவு 8 மணி |
| செப்.27 | லயன்ஸ்-மும்பை இந்தியன்ஸ் | ஆமதாபாத் | இரவு 8 மணி |
| செப்.28 | டைட்டன்ஸ்-ஐதராபாத் சன் ரைசர்ஸ் | ராஞ்சி | மாலை 4 மணி |
| ,, | பிரிஸ்பேன் ஹீட்-சென்னை சூப்பர் கிங்ஸ் | ராஞ்சி | இரவு 8 மணி |
| செப்.29 | லயன்ஸ்-ஒட்டாகோ | ஜெய்ப்பூர் | மாலை 4 மணி |
| ,, | ராஜஸ்தான் ராயல்ஸ்-பெர்த் ஸ்கார்சர்ஸ் | ஜெய்ப்பூர் | இரவு 8 மணி |
| செப்.30 | டைட்டன்ஸ்-டிரினிடாட் டொபாக்கோ | ஆமதாபாத் | மாலை 4 மணி |
| ,, | பிரிஸ்பேன் ஹீட்-ஐதராபாத் சன் ரைசர்ஸ் | ஆமதாபாத் | இரவு 8 மணி |
| அக்.1 | ராஜஸ்தான் ராயல்ஸ்-ஒட்டாகோ | ஜெய்ப்பூர் | இரவு 8 மணி |
| அக்.2 | மும்பை இந்தியன்ஸ்-பெர்த் ஸ்கார்சர்ஸ் | டெல்லி | மாலை 4 மணி |
| ,, | சென்னை சூப்பர் கிங்ஸ்-டிரினிடாட் டொபாக்கோ | டெல்லி | இரவு 8 மணி |
| அக்.4 | முதலாவது அரை இறுதி | ஜெய்ப்பூர் | இரவு 8 மணி |
| அக்.5 | இரண்டாவது அரை இறுதி | டெல்லி | இரவு 8 மணி |
| அக்.6 | இறுதிப்போட்டி | டெல்லி | இரவு 8 மணி |

# முதுகு உபாதைக்கு சத்திரசிகிச்சை செய்கிறார் டெனிஸ் அன்டி முரே

நடப்பு விம்பிள்டன் சம்பியன் அன்டி முரே சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்படவுள்ளார். அவருக்கு ஏற்பட்டுள்ள முதுகு உபாதை காரணமாகவே சத்திர சிகிச்சைகடு அவர் உள்ளாகவுள்ளார்.

இவ்வாண்டு இடம்பெற்ற விம்பிள்டன் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற அன்டி முரே, அதன் பின்னர் ஐக்கிய அமெரிக்க பகிரங்க டெனிஸ் தொடரில் காலிறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்தார்.

இந்நிலையில் அவருக்கு ஏற்பட்டுள்ள முதுகு உபாதைக்காக அவர் சத்திரசிகிச்சைக்கு உள்ளாகவுள்ளார். இதன் காரணமாக தாய்லாந்து பகிரங்க டெனிஸ் தொடரில் அவர் பங்குபெற முடியாது என அறி விக்கப்பட்டுள்ளது.

அவர் அடுத்த வாரமளவில் இந்த சத்திரசிகிச்சைக்கு உள்ளாகுவார் எனவும், இந்தப் பருவகாலத்தில் அவரால் போட்டிகளில் பங்குபற்ற முடியாது போகும் எனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

# சம்பியன்ஸ் லீக்கில் அரையிறுதி ஆட்டத்தில் மும்பை அணியை சந்திக்க ஆவலாக உள்ளோம்

## - ராஜஸ்தான் அணித் தலைவர் ராவிட்



சம்பியன்ஸ் லீக் சுற்றுத் தொடரின் அரையிறுதில் மும்பை அணியை சந்திக்க ஆவலாக உள்ளதாக ராஜஸ்தான் அணித் தலைவர் டிராவிட் தெரிவித்தார்.

ஐந்தாவது சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' தொடர், இந்தியாவில் நேற்று ஆரம்பமாகியது. இதில் சென்னை, மும்பை, ராஜஸ்தான் உள்ளிட்ட 8 அணிகளுடன், தகுதி சுற்றில் இருந்து முன்னேறிய ஐதராபாத், ஒடாகோ அணிகளும் விளையாடுகின்றன.

ஜெய்ப்பூரில் நடைபெறும் முதல் போட்டியில், டிராவிட்டின் ராஜஸ்தான் அணி, சச்சின் இடம்பெற்றுள்ள மும்பை அணியை சந்திக்கிறது. இருவருமே சிரேஸ்ட வீரர்கள் என்பதால், வண்ண சீருடையில் பங்கேற்கும் கடைசித் தொடர் இதுவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து ராஜஸ்தான் அணித் தலைவர் டிராவிட் கூறுகையில்,

சச்சின் பெரிய வீரர். இந்திய அணியில் இருவரும் இணைந்தும், மற்ற நேரங்களில் எதிர் எதிராகவும் விளையாடியுள்ளோம். இத்தொடரின் அரையிறுதியில் நாங்கள் மோத வேண்டும் என்று விரும்புகிறேன். இது தான் எனது கடைசி 'ரி-20 தொடர் என்று பேசப்படுகிறது. அடுத்த ஆண்டு குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. இப்போதைய நிலையில், சம்பியன்ஸ் லீக் தொடரில் மட்டும் கவனம் செலுத்தவுள்ளேன் என்றார்.

# கங்குலிக்கு விருது

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி மற்றும் டெனிஸ் வீரர் பயசுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட உள்ளது.

மேற்குவங்க விளையாட்டு வீரர்களுக்கு அம்மாநில அரசு விருது வழங்கி கௌரவிக்க முடிவு செய்துள்ளது.

இதில் கொல்கத்தாவின் செல்லப் பிள்ளையான முன்னாள் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி, சமீபத்தில் அமெரிக்க திறந்த டெனிஸ் தொடரின் ஆண்கள் இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற கொல்கத்தாவில் பிறந்த பயசுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

இவர்களை தவிர, 50 இற்கும் மேற்பட்ட வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளது.

இது குறித்து கங்குலி கூறுகையில்,

என் வாழ்க்கையில் இதனை மகத்தான சாதனையாக கருதுகிறேன். இந்திய டெனிஸ் வீரர் பயசை சந்திக்க ஆர்வமாக இருக்கிறேன்.

வயது என்பது ஒரு எண மட்டும் தான் என்றும் தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்கும் படி அவருக்கு ஆலோசனை வழங்குவேன் எனவும் கூறினார்.







வாக்களிக்கச் செல்லும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் முதன்மை வேட்பாளர் தவராசாவையும் முதலாவது படத்திலும், வாக்களிப்பு நடைபெறும் இடங்களை கண்காணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரனை மற்றைய படத்திலும் காணலாம்.

## வாக்குப் பெட்டிகளுடன் சென்ற வாகனத்துடன் மோதி விபத்து

(சிலாபம்)

வாக்குப்பெட்டிகளுடன் சென்ற வாகனங்களை மோதி சென்ற வாகனத்தை கைப்பற்றியுள்ள பொலிஸார் அந்த வாகனத்தின் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

நேற்றையதினம் வாக்களிப்பு நிறைவடைந்து வாக்குப் பெட்டிகளை வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச்சென்றுக் கொண்டிருந்தபோதே கடுவலை மேயர் பி.எச். புத்ததாஸவின் வாகனம் அந்த வாகனங்களுடன் மோதியுள்ளது.

சிலாபம் வட்டக்கள்ளி என்ற இடத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிளுடனும் அவரது வாகனம மோதியுள்ளது. இதனால் மூவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தையடுத்து வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளதுடன் வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தனர். (எ-11)

# இலங்கையில் மட்டும் நவிப்பிள்ளைக்கு எதிர்ப்பு

## ஐ.நா அலுவலகம் குற்றச்சாட்டு

உலகில் உள்ள நாடுகளில் இலங்கை அரசாங்கமே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிராக சேறுபூசும் பிரசாரங்களை மேற்கொண்டதாக ஆணையாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணையாளர் இலங்கை அரசாங்கத்தின் சேறுபூசும் பிரசாரங்களுக்கு இலக்காகியுள்ளதாக ஆணையாளரின் அலுவலகத்தின் பேச்சாளர் ரூபார்ட் கொல்வில் தெரிவித்தார்.

நவநீதம்பிள்ளை கடந்த மாதம் இலங்கைக்கு மேற்கொண்ட ஆய்வு பயணம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட அரசாங்கத்தில் உள்ள பொறுப்பு மிக்கவர்கள் இதுவரை நடந்திராத வகையில், ஆணையாளரின் கருத்துக்களுக்கு தவறான வரைவிலக்கணங்களை கொடுத்து வருவதுடன் அவருக்கு எதிராக சேறு பூசும் தாக்குதல்களை தொடுத்து வருகின்றனர்.

இலங்கையில் மனித உரிமை ஆணையாளருக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும். அது மிகவும் அதிருப்தியடையச் செய்யும் நடவடிக்கை எனவும் கொல்வில் குறிப்பிட்டார். (எ-11)

Personal & Group Classes
Jaffna-Vavuniya
2D-Drawing 3D-Modeling
Auto CAD
Lecturer By:K.N.Mugunthan(D.A)
Cert.in Auto CAD 2D-Drawing
Dept.of Civil Engineering
University of Peratheniya
Cert.in Auto CAD 2010
University of Colombo
0775116320
071 8617972
Cert.in Advanced 3D-Modelling in Auto CAD
Dept.of Mech.Engineering
University of Moratuwa
Cert.in 2D & 3D-Modelling in Auto CAD
Open University of Sri-Lanka

## பொதுநலவாய நாடுகள் மாநாடு

# எலிசபெத் மகாராணியுடன் நியூசிலாந்து பிரதமர் பேச்சு

(வெலிங்டன்)

நியூலாந்து பிரதமர் ஜோன் கீ, பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத்தை சந்தித்து இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

மகாராணியார் கடந்த 40 வருடங்களுக்கு பின்னர் கலந்து கொள்ளாத முதலாவது பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாடு இலங்கையில் நடைபெறவுள்ள மாநாடாகும். அவருக்குப் பதிலாக இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கம் மீது சுமத்தப்பட்டுள்ள மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக மாநாட்டை புறக்கணிக்க போவதாக கனேடிய பிரதமர் ஏற்கெனவே அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நியூசிலாந்து தொலைக் காட்சி செய்தியாளரின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ஜோன் கீ, கனடாவின் பார்வையில் அவர்கள் எடுத்துள்ள முடிவுக்கு மதிப்பளிப்பதாக நியூசிலாந்து பிரதமர் கூறியுள்ளார். இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாது போனால் என்ன கிடைக்க போகிறது என்பதை நியூசிலாந்தின் பார்வையில் இருந்து நான் யூகிக்கின்றேன் என்றார்.

நியூசிலாந்தின் பால் மா ஏற்றுமதி தொடர்பாக ஏற்பட்ட எதிர்ப்பை சரி செய்யும் வகையில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதற்காக நியூசிலாந்து மாநாட்டில் கலந்து கொள்ள தீர்மானித்துள்ளதா என தொலைக் காட்சி செய்தியாளர் பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பிரதமர் கீ, இலங்கை என்பது நியூசிலாந்துக்கு மிகப் பெரிய சந்தையாகும். இலங்கையில் அரை பில்லியன் டொலர் பெறுமதியான பொன்டேரா உற்பத்திகள் விற்பனை செய்யப்படுகின்றன என்றார். (எ-11)

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணநாதன் ராகுலன்



மந்துவில் கிழக்கு தெருவாரம் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆறுகால்மடம் கல்திட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்வன் கிருஷ்ணநாதன் ராகுலன் 20.09.2013 அன்று காலமானார்.

அன்னார் கிருஷ்ணநாதன் (பனை, தென்னைவள உத்தியோகத்தர்) யோகலக்ஷ்சுமியின் அன்புப் புதல்வனும், நிஷாந்தினி, நிஷாந்தன், விதுரன், விதுஷா (மாணவி - மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(4000) தகவல்: குடும்பத்தினர்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS
Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Young Learners for English (YLE) [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch - 1 23.09.2013
Batch - 2 28.09.2013
Batch - 3 30.09.2013
Batch - 4 05.10.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

| | ஊர்காவற்றுறை | வட்டுக்கோட்டை | காங்கேசன்துறை | மானிப்பாய் | கோப்பாய் | உடுப்பிட்டி | பருத்தித்துறை | சாவகச்சேரி | நல்லூர் | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 8917 | 23442 | 19596 | 28210 | 26467 | 18855 | 11249 | 17145 | 23733 | 16421 |
| ஐ.ம.சு.மு | 4164 | 3763 | 4048 | 3898 | 4386 | 2424 | 2551 | 3240 | 2651 | 2416 |
| ஐ.தே.க | | 173 | 35 | 76 | 127 | 57 | 20 | 71 | 148 | 60 |
| மற்றவை | | | | | | | | | | |
| வாக்களிக்கப்பட்டவை | 14604 | | 26021 | | | | | | 28424 | 20303 |
| நிராகரிக்கப்பட்டவை | 1377 | | 2074 | இந்த அட்டவணை அச்சுக்குப் போகும் வரை கிடைக்கப்பெற்ற முடிபுகளே... | | | | | 1650 | 1240 |
| செல்லுபடியானவை | 13227 | | 23947 | | | | | | 26774 | 19063 |
| பதிவுசெய்யப்பட்டவை | 21548 | | 61196 | | | | | | 42466 | 28610 |

# முழுமையான மாவட்ட முடிவு

## கிளிநொச்சி மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 37079 | 81.57% |
| ஐ.ம.சு.மு | 7897 | 17.37% |
| ஐ.தே.க | 54 | 0.12% |
| வாக்களிக்கப்பட்டவை | 50194 | 73.17% |
| நிராகரிக்கப்பட்டவை | 4735 | 9.43% |
| செல்லுபடியானவை | 45459 | 90.57% |
| பதிவுசெய்யப்பட்டவை | 68600 | |

## முல்லைத்தீவு மர்வட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 28266 | 78.56% |
| ஐ.ம.சு.மு | 7209 | 20.04% |
| மு.கா | 199 | 0.55% |
| ஐ.தே.க | 197 | 0.55% |
| வாக்களிக்கப்பட்டவை | 38802 | 72.28% |
| நிராகரிக்கப்பட்டவை | 2820 | 7.27% |
| செல்லுபடியானவை | 35982 | 92.73% |
| பதிவுசெய்யப்பட்டவை | 53683 | |

# வேட்பாளர் மீது துப்பாக்கிச் சூடு?

(சாவகச்சேரி)

வரணியில் த.தே.கூ. வேட்பாளரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக முறையிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் தங்கராசா என்பவர் வரணியில் கைது செய்யப்பட்டுள்ள தாக வந்த தகவலையடுத்து, தமிழ்த தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர சயந்தன் சம்பவ இடத்திற்குச் சென்றதாகவும், அப்போது கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட தங்கராசா விடுதலை செய்யப்பட்ட தாக அறிந்து அங்கிருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் சயந்தனின் வாகனத்தை நோக்கி அந்தப் பகுதியில் இருந்த இராணுவத் தினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனா திராஜா தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் வேட்பா ளர் சயந்தனோ அல்லது வேறு எவருமோ காயமடையவில்லை என்றும்மாவை சேனாதிராஜா கூறினார்

இதேவேளை இந்தச் சம்பவம் பற்றி அறிந்து அவ்விடத்திற்குச் சென்று திரும்பியுள்ள கபே தேர்தல கண்காணிப்பு குழுவைச் சேர்ந்த அகமட் மனாஸ் மக்கீன்,

அங்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதற்கான அடையாளங் களஎதுவும்காணப்படவில்லைஎன்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு இல்க்காகிய தாகக் கூறப்படுகின்ற வாகனத்தை யும் தாம் காணவில்லை என்றும், வரணி வாக்களிப்பு நிலையத்தில் தற்போது வாக்களிப்பு தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருந்த தாகவும் கூறினார்.(எ-11)

# வடக்கு மாகாண சபை...

இராணுவத்தினர் சம்பந்தப் பட்ட இவ்வாறான 11 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கபே அமைப் பின் இயக்குநர் கீர்த்தி தென்னக் கோன் கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பில் கூறினார்.

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பகுதியில் இரண்டு வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, மத்திய மாகாணத் தில் தமிழர்கள் பெரும்பான்மை யாக வாழும் நுவரெலியா மாவட் டத்திலும் கண்டியிலும் தோட்டப்புறங் களில் நேற்றும் சட்டவிரோத பிரசா ரங்கள் நடந்துள்ளன.

கம்பளை, பன்வில பகுதிகளி லும் துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன.

வடமேல் மாகாணத்தில் புத்த ளம் மாவட்டம் வென்னப்புவ பகுதி யில் நேற்று அதிகாலை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களின் நான்கு வீடுகள் தாக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் முன்னெப்போதும இல்லாத அளவுக்கு இம் முறை மாகாணசபைத் தேர்தலில் மொத்த மாக 576 தேர்தல் விதி மீறல்கள் நடந்துள்ளன.

தேர்தல் காலத்தைப் போலவே வாக்குகள் எண்ணப்படும் நடவடிக் கைகளை கண்காணிக்கவும் கபே நிறுவனம் தேர்தல் ஆணையா ளரிடம் அனுமதி கோரியிருந்தது.

ஆனால் அதற்கு அனுமதி கிடைக்காதமை தேர்தல் முறை யின் வெளிப்படைத் தன்மையையே கேள்விக்குள்ளாக்கியிருப்பதா கவும் ஒட்டுமொத்தத்தில் இந்த மாகாண சபைத் தேர்தல் நீதியாகவும் நியாய மாகவும் அமையவில்லை என்றும் கபே அமைப்பு தனது கண்காணிப்பை வெளியிட்டுள்ளது. (எ-11)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*

*பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்*

France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (வன்னி மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *Certificate* அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. யாழில் 1976 இல் இருந்து...



- An international language, the language of culture
- A language for education, a language for job market and
- A language that is fun to learn

➢ Just say "*Yes, I can... speak French*"

குறிப்பு: தற்போது A/L எடுத்த மாணவர்களுக்கு விசேட அனுமதிகள்...

புதிய வகுப்பு மிக விரைவில்... உடன் பதிவு செய்யவும்...

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)


# அமோக வெற்றி...

கிளிநொச்சி மாவட்ட மொத்த தேர்தல் முடிவின்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டி யுள்ளதுடன் 3 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஒரு ஆசனத் தைப் பெற்றுள் ளது.

யாழ்.மாவட்ட தேர்தல் முடிவு களில் அச்சுக்குப் போகும்வரை யான முடிபுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது.

இரண்டாவது இடத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு காணப்படுகின்றது.

இதன் முழுமையான பெறுபேறு கள் இன்று காலை வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் முடிவுகளின்படி தெரிவு செய்யப்பட வேண்டிய 5 ஆசனங்களில் 4 ஆச னங்களை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வெற்றி பெற்றுள்ளதோடு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணக்கு ஒரு ஆசனமே கிடைத்துள்ளது.

இதேபோன்று வவுனியா மன்னார் மாவட்டங்களிலும் தபால் மூல வாக்களிப்பின் படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியுள்ளது. (எ-11,6,4)

# அமைதியாக நடைபெற்...

வாக்குப்பதிவு நடைபெற்ற பின்னா வாக்குப் பெட்டிகள் பாதுகாப்பாக எண்ணும் இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் மற்றும் பவ்ரல அமைப்பு, கபே அமைப்பு உட்பட்ட தேர்தல் கண்காணிப்பு அமைப்பு களும் கண்காணிப்பில் ஈடுபட்டன.

இதனால் கள்ளவாக்குப் போடும் நடவடிக்கைகள் முற்றாக தடை செய்யப்பட்டிருந்தன. ஆங்காங்கே சில வாக்குச் சாவடிகளுக்கு அருகில் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் காணப்பட்டனர் இருந்தும் அவர்களை பொலிஸார் அங்கிருந்து அப்புறப் படுத்தினர்.

இம்முறை ஒப்பீட்டளவில் அதி களவானோர் வாக்குப் பதிவினை மேற்கொண்டுள்ளனர். வடமாகாண வாக்களிப்படி,

யாழ். மாவட்டத்தில் 60 வீதமான வாக்குகளும், வவுனியா மாவட்டத் தில் 65 வீதமான வாக்குகளும்,

மன்னார் மாவட்டத்தில் 70 வீதமான வாக்குகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 68 வீதமான வாக்கு களும, முல்லைத்தீவு மாவட்டத்தல் 71வீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

வாக்களிப்பு நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை இடம்பெற்றது.

இதில்வடக்கு மாகாண சபைக்கான வாக்களிப்பு முடிவடைந்ததும் யாழ். மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களிலிருந்து யாழ்.மத்திய கல்லூரிக்கு வாக்குப் பெட்டிகள் உத்தி யோகத்தர்களால் பொலிஸாரின் பாதுகாப்புடன் கொண்டு செல்லப் பட்டு இரவு 7 மணிக்கு வாக்கு என்னும் பணிகள் இடம்பெற்றன.

வடக்குத் தேர்தலில் வாக்களிப் பதற்கு 7 லட்சத்து 14 ஆயிரத்து 488 பேர் தகுதி பெற்றிருந்தனர். இவர்களுக்காக 830 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டி ருந்தன.

யாழ்.மாவட்டத்தில் 4 லட்சத்து 26 ஆயிரத்து 703 பேர் வாக்களிக் கத் தகுதி பெற்றிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 68 ஆயிரத்து 589 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 52 ஆயிரத்து 409 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் 72 ஆயிரத்து 420 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் 94 ஆயிரத்து 376 பேர்வாக்களித்த தகுதி பெற்றிருந்தனர். (எ-11,6)


## நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவிற்கு. PAVING STONES.

உங்கள் இல்லங்கள் நிறுவனங்களை அழகுபடுத்துவதற்கு தேவையான பல்வேறுவடிவமைப்புக்களை கொண்ட நிலப்பதிப்புக்கற்களை யாழ், வ்வுனியா, முள்ளியவளை, திருமலை, கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள எமது காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.







(C-4755)

பிரணவன் என்ரபிறைசஸ். பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.(சங்கிலியன் சிலைக்கு முன்பாக) தொடர்பு : 0773818799.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.